பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 30 சனிக்கிழமை (16~10~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:326

### இராணுவ ரீதியான முயற்சிகள் தோற்றுப்போனதால்

# ஜனநாயக வேடத்தில் கருணாவை களமிறக்கும் சதியில் வெளிச்சக்தி!

## முறிகண்டி விபத்தில் 2 பேர் பலி!

### ஹைஏஸ் வான்-லொறி நேருக்கு நேர் மோதின

கிளிநொச்சி, ஒக்.16

**ஏ-9 வீதியில் - முறிகண்டிப் பகுதியில் - நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற ஒரு கோர வீதி விபத்தில் இருவர் உயிரிழந்தனர்; ஆறுபேர் காயமடைந்தனர்.**

**கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருந்த ஹைஏஸ் ரக வான் ஒன்றும் - அடைமழைக்கு மத்தியில் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதால் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.**

விபத்தில் சிக்கிய வான் கல்வியங்காட்டைச் சேர்ந்த ஒருவருடையது. அதன் சாரதியான பொன்னுத்துரை சிவலிங்கம்(வயது 55) என்பவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது. வானில் பயணம் செய்து கொண்டிருந்தோரில் யாழ்ப்பாணம் கச்சேரியடியைச் சேர்ந்த திருமதி சவுந்தரம்(வயது 68) என்ற வயோதிபப் பெண்ணும் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

வானில் இருந்த வேறு ஆறு பேர் படுகாயங்களுக்குள்ளாகினர். அவர்கள் அனைவரும் மழைக்கு மத்தியில் மீட்கப்பட்டு கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர்.

ச.சந்திரன் (பெரியமாவடி), செல்வராணி (யாழ்.கச்சேரியடி), கு.தர்மலிங்கம்(கல்வியங்காடு) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் நேற்று மாலை யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். ஏனைய மூவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான போக்காளர்களை ஒன்றுதிரட்டும் திரைமறைவு சதி நாடகம்

கொழும்பு,ஒக்ரோபர்16

**விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவைப் பயன்படுத்தி இராணுவ ரீதியாகப் புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சி தோற்றுப்போய்விட்டது. இதனை நன்கு உணர்ந்துள்ள வெளிநாட்டுச் சக்திகள் சில, புலிகளுக்கு எதிரான போக்குடைய பிற தனித்தனி ஆள்களை கருணாவின் பெயருக்குப் பின்னால் ஒன்றிணைய வைப்பதன் மூலம் ஈழத் தமிழர் தரப்பையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பலவீனப் படுத்தும் திரைமறைவு சதிவேலையில் இறங்கியிருக்கின்றன.**

**கருணாவை ஜனநாயகவாதி வேடத்தில் - அரசியல் கட்சி என்ற நாடகத்தின் மூலமாக - களமிறக்கும் முயற்சிகளுக்கு முண்டு கொடுக்கும் பின்னணியில், சூத்திரதாரிகளாக இச்சக்திகளே உள்ளன என்று தமிழர் தரப்புத் தலைவர்கள் மத்தியில் சில செய்திகள் கசியத் தொடங்கியிருக்கின்றன.**

விடுதலைப் புலிகளினால் இயக்கத்திலிருந்து துரத்தப்பட்ட கருணாவோடு, ஏற்கனவே புலிகளுக்கு எதிராக இயங்கிய சில தமிழர் தரப்புகளும் இப்போது சேர்ந்து இயங்கக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் -

இந்தக் கூட்டிணைவை நெறிப்படுத்தும் பின்னணியில் அயல்நாடு ஒன்றின் உளவுப் பிரிவு அதிக பங்களித்திருப்பதாகவும் -

சில செய்திகள் கசியத்தொடங்கியிருப்பது தமிழர் தரப்பை பெரும் அதிர்ச்சிக்கும் அதிருப்திக்கும் உள்ளாக்கியிருக்கின்றது.

கருணாவுக்குப் பின்னணியில் அரசுத் தரப்பின் சில ஏஜென்ஸிகளே செயற்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கு மேலதிகமாக இப்போது வேறு பிற சக்திகளுக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்கள் வெளியாகத் தொடங்கியிருக்கின்றன.

இதை உறுதிப்படுத்துவது போல கருணா பெயரில் ஒன்றிணையும் ஆள்களின் பட்டியலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## பின்லாந்து அதிகாரியுடன் தமிழ்ச்செல்வன் பேச்சு

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பின்லாந்து அதிகாரிகள் ஆற்றும் அற்புதமான பணிக்காக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் நன்றி தெரிவித்தார். அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் அரசியல் விவகாரச் செயலாளர் ஜக்கோலஜராவாவை தமிழ்ச்செல்வன் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். பின்லாந்து நாட்டவரின் பணிக்குத் தமிழ் மக்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்றும் தமிழ்ச்செல்வன் கூறினார். சமாதான முயற்சிகளின் நிலை பற்றியும் தற்போதைய அரசியல் நிலைமை பற்றியும் தமிழ்ச்செல்வன் இச்சந்திப்பில் விளக்கினார்.

இலங்கை அரசும், புலிகளும் விரைவாகப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்று பின்லாந்து செயலர், தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தார். போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமானப் பணிகளுக்கும், சமாதான முயற்சிகளுக்கும் முழு ஒத்துழைப்பை பின்லாந்து

(16ஆம் பக்கம் பார்க்க)



பின்லாந்து நாட்டின் வெளிவிவகார அமைச்சின் அரசியல் விவகாரச் செயலாளர் ஜக்கோலஜராவாவை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நேற்றுமுன்தினம் சந்தித்தபோது.....

## கருணாவின் கொல்லப்பட்ட சகோதரரான ரெஜியின் முகாமிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு,ஒக்.16

பொலன்னறுவைக் காட்டுப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த - கருணாவின் சகோதரர் ரெஜியும் அவரது சகாக்களும் தங்கியிருந்த - இரகசிய முகாம் என்று கருதப்படும் ஓரிடத்தில் தொகையான ஆயுதங்கள் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை பொலன்னறுவைக் காட்டுப் பகுதியான கந்தேகம என்ற இடத்தில் இரகசியமாக அமைக்கப்பட்டிருந்த முகாம் ஒன்றை அரலகங்வில பொலீஸார் சுற்றிவளைத்தனர். அந்த முகாமுக்குள் ஒருவரும் இருக்கவில்லை. கைவிடப்பட்ட நிலையில் இருந்த எம்.16 ரகத் துப்பாக்கி, கிரனேட் மூன்று, நான்கு மகஸின்கள், தொலைநோக்கிக் கருவிகள், மழைக்கவசங்கள், குளிருக்குப் பயன்படுத்தப்படும் 'ஸ்வெட்டர்கள்', டோர்ச்லைட்டுகள், தமிழில் எழுதப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நிலை பற்றி விளக்குவதற்கு தமிழ் எம்.பிக்கள் இன்று திருமலையில்

### மூன்று நாள்கள் சுற்றுப்பயணம்

திருகோணமலை,ஒக்.16

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் இன்று திருகோணமலையில் சந்திக்கின்றனர்.

அவர்கள் தமிழ்ப் பிரதிநிதிகள், கஷ்டப் பிரதேசப் பிரதிநிதிகள் மற்றும் முஸ்லிம் தரப்பினரையும் சந்திக்கவுள்ளனர் என்று திருகோணமலை மாவட்ட எம்.பியான க.துரைரெட்ணசிங்கம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இன்று முதல் சுமார் மூன்று தினங்கள் மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கும் சென்று தற்போதைய அரசியல் நிலை குறித்து எம்.பிக்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்துவர் என்றும், அவர்களின் குறைநிறைகளைக் கேட்டு அறிவர் என்றும் கூறப்படுகின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# உறுதியளிக்கப்பட்ட தொகை 6 ஆயிரம்; இப்போது வழங்கப்படுவது 5 ஆயிரம்!

## அநீதி இழைக்கப்படுவதாக யாழ். மாவட்ட பட்டதாரிகள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.16

அண்மையில் நியமனம் பெற்ற முதலாவது பிரிவு பட்டதாரிகளுக்கு பயிற்சிக்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதம் ஒன்றுக்கு 6 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் தற்போது 5 ஆயிரம் ரூபாவே வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கு முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட பட்டதாரிகள கூட்டாகக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

எமக்கான நியமனக் கடிதங்களில் மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற போதிலும் 5 ஆயிரம் ரூபாவே வழங்கப்பட்டிருக்கிறது.

இதனால் நாம் மிகுந்த ஆச்சரியமும் கவலையும் அடைகிறோம். வவுனியா மாவட்ட பட்டதாரிகளுக்கு 5 ஆயிரத்து 800 ரூபாவும் திருகோணமலை மாவட்டப் பட்டதாரிகளுக்கு 5 ஆயிரத்து 600 ரூபாவும் கொழும்பு போன்ற தென்னிலைங்கை மாவட்டப் பட்டதாரிகளுக்கு உறுதியளிக்கப்பட்டபடி 6ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுவதாக அறிகிறோம்.

இவ்வாறு மாவட்டத்துக்கு மாவட்டம் கொடுப்பனவுகள் வித்தியாசப்படுவது அரசின் பாகுபாட்டு மனப்பாங்கையே காட்டுகிறது.

இது ஒருபுறமிருக்க -

பயிற்சி நாள்களில் ஒரு நாள் சமுகமளிக்காதவர்களுக்கு அந்த மாதத்துக்கான முழுக் கொடுப்பனவும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. சமுக மளிக்காத நாள்களுக்கான மருத்துவச் சான்றிதழ் (Medical Certificate) சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே அந்த மாதத்துக்குரிய கொடுபனவு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.

மருத்துவத் தேவைகள் அல்லாத - வேறு அத்தியாவசியத் தேவைகளின் நிமித்தம் ஒரு நாளோ, அரைநாளோ பயிற்சிக்குச் சமுகமளிகத் தவறியவர்கள் ஒரு மாதக் கொடுப்பனவையே இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

எனவே, இந்த விடயம் தொர்பாக அரச உயர் தரப்பினருடன் தொடர்புகொண்டு நியாயமான தீர்வைப் பெற்றுத்தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் முறைப்பாடு செய்திருக்கிறோம் - என்று அவர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் பயற்சி பெறும் பட்டதாரிகளுக்கான கொடுப்பனவுகளைக் கையாளும் அதிகாரி விதிமுறைகளை மிக இறுக்கமாகக் கையாள்வதாகவும் அதனால் தாம் பெரிதும் பாதிப்புறுவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர். (4)

## 2ஆவது தொகுதியினருக்கான பயிற்சிகள் 21ஆம் திகதி ஆரம்பம்

வேலையற்ற பட்டதாரிகளின் இரண்டாவது பகுதியினருக்கான விசேட பயிற்சிகள் ஒக்ரோபர் 21ஆம் திகதி ஆரம்பமாகும் என்று நிதி அமைசசு அறிவித்துள்ளது.

மூன்று மாதகாலம் இடம்பெறவிருக்கும் இந்த விசேட பயிற்சிகளில் 24 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளின் முதல் தொகுதியினருக்கான பயிற்சிகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி ஆரம்பமாகின. இதில் சுமார் 17 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் இடம்பெற்றிருந்தனர்.

நாடு முழுவதிலுமுள்ள 23 மாவட்டங்களின 215 மையங்களில் இவர்கள் தற்பொழுது பயிற்சி பெற்றுவருகின்றார்கள். இவர்களுக்கு மாதம் ரூபா 6 ஆயிரம் செலவு தொகை வழங்கப்பட்டுவருகின்றது. முதல் தொகுதியினருக்கான பயிற்சிகளுக்கு பயிற்சியளிப்பதற்கான புலமைசார் ஆள் அணி மற்றும் வளங்களின் பற்றாக்குறை காரணமாக இரண்டாவது தொகுதியினருக்கு பயிற்சியளிப்பதில் காலதாமம் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ப)

## 'அலைபாடும் பரணி' ஒலிநாடா அறிமுகம்

விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் ஆதரவில், இசைப்பிரியனின் இசையில், தர்மேந்திரா கலையகத்தால் உருவாக்கப்பட்ட 'அலை பாடும் பரணி' ஒலி நாடா அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நெல்லியடி, நெல்லை முருகன் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-7-203)

## சிங்கர் நிறுவனத்தின் சமையல் செய்முறைக் காட்சி

தீபாவளியை முன்னிட்டு சிங்கர் நிறுவனம் யாழ்ப்பாணம் இல்லத்தரசிகளுக்கு நடத்தும் சமையல் செய்முறைக் காட்சி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இதில் சிங்கர் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் செயற்பாட்டு முகாமையாளர் சுஜீவ விதான தலைமையிலான குழுவினர் சிங்கர் சமையலறை உபகரணங்களைப் பாவித்து எவ்வாறு சுவையான உணவு வகைகளைத் தயாரிப்பது என்று செய்முறைக் காட்சிமூலம் விளக்கமளிப்பர்.

இதன்போது 25 வகையான உணவுப்பண்டங்கள் தயாரித்துக் காட்டப்படும் எனத் தெரிவிககப்பட்டது. (8)

## வாழைச்சேனையில் வியாழன் இரவு இருவேறு சம்பவங்களில் இருவர் காயம்!

ஏறாவூர்,ஒக்.16

வாழைச்சேனைப் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் மற்றும் கறுவாக்கேணி ஆகிய பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இரு வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருவரும் சேர்க்கப்பட்டுள்ளனர். விநாயகபுரத்தில் இரவு 7.45 மணியளவில் வீட்டில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் மீது ஆயுததாரிகள் இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். இச் சம்பவத்தில் செல்லத்துரை ஆனந்தன் (வயது-60) என்பவர் படுகாயமடைந்தார்.

கறுவாக்கேணியில் இடம்பெற்ற சம்பவத்தில் வீதியால் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் மீது இரவு 8 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் வேதநாயகம் சுதாகரன் (வயது-20) என்பவர் படுகாயமடைந்தார்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-க)

## பொலன்னறுவை முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று துக்கதினம்; இயல்பு வாழ்வு பாதிப்பு

ஏறாவூர்,ஒக்.16

பொலன்னறுவை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று வெள்ளிக்கிழமை பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

1992ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி பள்ளித்திடல், பங்குராணை, அளிஞ்சிப்பொத்தானை, அஹமட்புரம், அக்பர்புரம் ஆகிய பிரதேசங்களில் வைத்து 178 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதன் 12ஆவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டே நேற்றுத் துககதினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் அங்கு இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

பொலன்னறுவை இஸ்லாமிய மக்கள் மன்றம் என்ற அமைப்பு துக்கதினத்திற்கான அழைப்பை விடுத்திருந்தது. துக்கதினம் அனுஷ்டிக்கப்படுவதையிட்டுப் பள்ளிவாசல்களில் விசேட கத்தமுல் குர் ஆன் வைபவங்களும், து ஆப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. முஸ்லிம் பிரதேசங்களில் அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெற்றன.. துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் பிரதேசங்களில் பொலீஸார் விசேட பாதுகாப்பு ஏறபாடுகளை மேற்கொண்டிருந்தனர். (எ-க)

# ஈராக்கின் பலூஜா நகரில் அமெ. ஆக்ரோஷத் தாக்குதல்!

## பலர் மரணம்; அநேகர் படுகாயம்!

பலூஜா,ஒக்.16

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின் மேற்கு நகரான பலூஜாவில் அமெரிக்கக் கூட்டுப்படையினர் வான்வழி மற்றும் தரைமார்க்கமாகக் கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் பலர் உயிரிழந்துள்ளனர். அநேகர் படுகாயமுற்றனர். இறந்தவர்களின் எண்ணிக்கை தெளிவில்லை எனச் செய்திகள் தெரிவித்தன.

ஈராக்கின் அல்-கெய்டாத் தீவிரவாத அமைபபின் தலைவராகச் செயற்படும் ஜோர்தானைச் சேர்ந்த அபுமுஸாப் அல்ஸர்காவியை ஒப்படைக்குமாறு பலூஜா மக்களை இடைக்கால அரசு கேட்டுக்கொண்டதையடுத்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஈராக் இடைக்காலப் பிரதமர் இயத் அல்லாவி, "அபுமுஸாப் அல்-ஸர்காவியை ஒப்படைக்காது விட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று தெரிவித்திருந்தார்.

இத்தாக்குதல் இந்நகரை மீளக்கைப்பற்றுவதற்கான முயற்சியின் ஆரம்பக் கட்டமல்ல. அங்கு தொடர்ச்சியாக இடம்பெற்றவரும் இராணுவ நடவடிக்கைகளின் ஒரு பகுதியே என அமெரிக்கத் தரப்பில் பேசவல்ல அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதுகாப்பு வலயமான 'கிரீன் சூன்' பகுதியில் இடம்பெற்ற இரண்டு குண்டுத்தாக்குல்களை அடுத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கு மிகக் கடுமையான பாதுகாப்பைப் பலப்படுத்தியதன் பின்னரே அமெரிக்க இராணுவம் இத்தாக்குலை மேற்கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கப் போர் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் நேற்றுமுன்தினம் முதல் நேற்று வரை தொடரான தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தாக்குதல் ஸர்காவியின் ஆதரவாளர்களின் வீடுகள் மற்றும் ஆயுதக்கிடங்குகள், சட்டவிரோதச் சோதனைச்சாவடிகள் போன்றவற்றைக் குறிவைத்தே நடத்தப்பட்டது.

இடைக்கால அரசுடன் பலூஜா பிரதிநிதிகள் நடத்திவந்த பேச்சுக்களை இடைநிறுத்தி சில மணி நேரங்களின் பின்னரே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

ஸர்காவியை ஒப்படைக்கவேண்டும் என்று ஈராக் அரசு விடுத்திருக்கும் கோரிக்கை நிறைவேற்றப்படுவது சாத்தியமற்ற ஒன்று என்று தெரிவிக்கப்பட்டது. அமெரிக்கப் படைகள் கூட அவரைப் பிடிக்கமுடியவில்லை. இனிமேலும் அது முடியாத காரியமாகும். ஜோர்தானில் பிறந்த ஸர்காவி பலூஜாவிலேயே மறைந்திருக்கிறார் என நம்பப்படுகிறது. இவரைப் பிடித்துக் கொடுபபவருக்கு 2 கோடியே 50 லட்சம் டொலர்களை சன்மானமாக வழங்குவதாக அமெரிக்கா அறிவிததுள்ளது.

- இவ்வாறு நகரத் தூதுக்குழுவொன்று தெரிவித்தது.

அல்-கெய்டாவுடன் தொடர்புடைய ஸர்காவியின் குழுவினர் பலரைப் பணயக்கைதிகளாகப் பிடித்துப் படுகொலை செய்துள்ளனர். பக்தாத்தின் 'கிரீன் சூன்' பாதுகாப்பு வலயத்தில் அமைநதுள்ள சந்தை மற்றும் உணவகத்தில் நேற்றுமுன்தினம் இரண்டு குண்டுகளை வெடிக்கச் செய்ததும் ஸர்காவியின் தலைமையிலான குழுவினரே.

இதில் 5 பேர் கொல்லப்பட்டனர்; 18 பேர் படுகாயமடைந்தனர். ஈராக்கின் பாதுகாப்புப் பிரதேசத்தில் இடம்பெற்ற முதல் தாக்குதல் இது வெனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடத்தப்பட்ட அமெரிக்காவின் தாக்குதலில் இறந்தவர்களின் படுகாயமடைந்தவர்களின் எண்ணிக்கை பற்றித் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை. பல கட்டடங்கள் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

மீட்புப் பணியாளர்களும், கிராமவாசிகளும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர். அத்தோடு, அமெரிக்க ஒப்பந்தக்காரர் ஒருவரைக் காணவில்லை. அவர் ஒருவேளை கொல்லப்பட்டிருப்பார் என ஊகிக்கப்படுகிறது.

## ஆப்கானில் வாக்கு எண்ணிக்கை இன்னும் தாமதமாகலாம்

காபூல்,ஒக்.16

ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தலின் வாக்கு எண்ணிக்கையை ஆரம்பிப்பதற்கு மேலும் பல நாள்கள் எடுக்குமென எதிர் பார்க்கப்படுகின்றது.

ஆப்கானில் முதல்முறையாகக் கடந்த சனிக்கிழமை ஜனநாயக முறைப்படி அதிபர் தேர்தல் நடந்தது. தற்போதைய அதிபர் ஹமீத் கர்சாய் உட்பட 18 வேட்பாளர்கள் இதில் போட்டியிட்டனர். இவர்களில் 14 பேர் போட்டியில் இருநது வாபஸ் பெற்றுள்ளனர்.

தேர்தலில் அதிகளவு முறைகேடு நடந்ததாகக் குற்றஞ்சாட்டி கர்சாய் தவிர மற்ற வேட்பாளர்கள் அனைவரும் தேர்தலைப் புறக்கணித்தனர்.

முறைகேடுகள் குறித்து விசாரிக்க ஐ.நா - ஆப்கான் கூட்டுத் தேர்தல் நிர்வாகக்குழு அமைக்கப்பட்டுள்ளது. முறைகேடுகள் குறித்துக் கொடுக்கப்பட்ட 43 குற்றச்சாட்டுக்களில் 37ஐயே இக்குழு விசாரித்து முடித்துள்ளது.

இக்குழு தனது விசாரணையை முடித்துத் தமது முடிவை அறிவிக்கும் வரையில் வாக்கு எண்ணிக்கையை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, வாக்கு எண்ணிக்கை இன்னும் பல நாள்கள் எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க-8)

## ரஷ்ய விண்கல பயணம் ஆரம்பம்

பைகானூர்,ஒக்.16

மூன்று விண்வெளிவீரர்களுடன் ரஷ்ய 'சோயூஸ்' விண்கலம் நேற்றுமுன்தினம் விண்ணில் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது. அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகள் ஒன்றிணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை அமைத்துள்ளன.

ரஷ்ய மற்றும் அமெரிக்க வீரர்கள் இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் பல மாதங்களாகத் தங்கியிருந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், பிராணவாயு மற்றும் இன்னும் அத்தியாவசியப் பொருள்களை அமெரிக்காவும், ரஷ்யாவும் அனுப்பிவருகின்றன.

மூன்று [illegible]தம் அல்லது ஆறு மாதங்களுககு ஒரு முறை அங்குள்ள [illegible]ர் பூமிக்கு அழைத்துவரப்பட்டு, அவர்களுக்குப்பதிலாக மற்றவர்களை விண்கலங்கள் சுமந்து சென்றுவிட்டுவிட்டு வருகின்றன. கடந்த ஆண்டு கொலம்பியா விண்கலம் விபத்துக்குள்ளான பிறகு, விண்கலத்தில் விண்வெளி வீரர்களை அனுப்புவதை அமெரிக்கா நிறுத்திவைத்துள்ளது.

இதன்காரணமாக ரஷ்ய தரப்பில் 'சோயுஸ' விண்கலம் விண்ணுக்குச் சென்றுவருகின்றது. கஜகஸ்தானில் உள்ள பைகானூர் ஏவு தளத்தில் இருந்து நேற்றுமுன்தினம் 'சோயூஸ் டி.எம்.ஏ.5' வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. கடந்த 9ஆம் திகதியே சோயூஸ் விண்ணில் செலுத்தப்படவிருந்தது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விண்ணில் வெளியில் செலுத்துவது தாமதமானது.

ரஷ்ய விண்வெளிவீரர்கள் சலிசான் ஷரிபோவ், யூரி ஷரி ஜின், அமெரிக்க வீரர் லீரதய சியாவோ ஆகியோர் 10 நிமிடத்தில் பூமியின் சுற்று வட்டப்பாதையைச் சென்றடைந்தனர். இந்த விண்கலம் இன்று சர்வதேச விண்வெளி மையத்தைச் சென்றடையும், சியாவோவும், ஷரிபோவும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை விண்ணில் தங்கி பல்வேறு ஆராய்ச்சிகளை மேற கொள்ளவுள்ளனர்.

ஷரிஜின் 10 நாள்களில் மீண்டும் பூமி திரும்புவார். சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியுள்ள ரஷ்ய வீரர் ஜெனனாடி படால்காவும், அமெரிக்க வீரர் மைக்கேல் பங்கியும், ஷரிஜினுடன் பூமிக்குத் திரும்பவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருந்தாளர்கள் நேற்று சுகயீன லீவுப் போராட்டம்

## மருந்து பெறமுடியாது நோயாளர்கள் அவதி

யாழ்ப்பாணம்,ஒக்.16

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள போதனா வைத்தியசாலைகள் உட்பட சகல அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்தாளர்கள் நேற்று ஒரு நாள் சுகயீன லீவுப் போராட்டத்தில் குதித்தனர்.

இதனால், வைத்தியசேவை பெற வைத்தியசாலைகளுக்கு வருகைதந்த நோயாளர்கள் வைத்தியர்கள் பரிசோதித்த நிலையில் மருந்து பெறமுடியாமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

வெளிவாரியாகக் குறைந்தகால மருந்தாளர் பயிற்சிநெறியினை நிறைவுசெய்து கொண்ட மருந்தாளர்களுக்கு அரச வைத்திய சாலைகளில் நியமனம் வழங்குவதைக் கண்டித்தே இந்த சுகயீன லீவுப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, யாழ்போதனா வைத்தியசாலை மற்றும் மந்திகை ஆதார வைத்திய சாலை உட்பட குடாநாட்டில் உள்ள அரச வைத்திய சாலைகள் அனைத்திலும் இந்த ஒரு நாள் சுகயீன லீவுப் போராட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தப் போராட்டம் காரணமாக வெளி நோயாளர் பிரிவுகளில் சிகிச்சைபெற வந்த நோயாளர்கள் மருந்து பெறாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக் முடிந்தது.

(எ-15-70-6)

# சட்டத்தரணிக்கு 45 மாத சிறை

போலிக் கடவுச் சீட்டு வைத்திருந்த சட்டத்தரணி ஒருவருக்கு 45 மாத கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.கே.ஏ.திலன்க டில்ருக்ஷி காரியப்பெரும என்னும் சட்டத்தரணிக்கே இவ்வாறு கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.போலிக் கடவுச்சீட்டு வைத்திருந்தார் என்பது உட்பட மூன்று குற்றச்சாட்டுக்களின் பேரில் குடி வரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் குறித்த சட்டத் தரணி கைதாகியிருந்தார். ஒரு குற்றத்திற்குப் பதினைந்து மாத கடுழியச் சிறைத் தண்டனை என்ற வகையில் மூன்று வேறுவேறு குற்றங்களுக்கு நாற்பத்தைந்து மாதக் கடுழியச் சிறைத் தண்டனையும், மூன்று லட்சம் ரூபா தண்டமும் விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தார் கொழும்பு மாவட்ட நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன.

(எ-க)

## ஆண்டு நிறைவுவிழா

ஊர்காவற்றுறை,ஒக்.16

வவுனியா மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சமூக பொருளாதார சூழல் அபிவிருத்தியாளர் பொ.நரசிங்கம் தலைமையில் இந்தவிழா நடைபெறும்.

(எ-16)

# சான்றிதழ் வழங்கலும் சின்னம் சூட்டுதலும்

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ்.மாவட்டக் கரபந்தாட்டச் சங்கம் நடத்தும் கரபந்தாட்ட நடுவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் சின்னம் சூட்டும் நிகழவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு - கிழக்கு மாகாண உடற்கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா மற்றும் யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(10-5)

# ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தின் அறக்கொடை விழா நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.16

ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தின் முதலாவது ஆண்டு நிறைவு அறக்கொடை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை, மாலை என இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் காலை நிகழ்வுகளாக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுகன் தலைமையில் நல்லை ஆதீன முதல்வா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஆவரங்கால் சிவன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ வே.நடராஜக்குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகளும் -

பிரதம விருந்தினரான யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், சிறப்பு விருந்தினர்களான கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கௌரவவிருந்தினரான கோப்பாய் உதவிப்பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோரின் உரைகளும் -

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி -பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன், ஆவரங்கால நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் அ.அருணந்திசிவம், யாழ்.கல்வித்திணைக்கள இணைப்பாளர் க.மனோகரநேரு ஆகியோரின் வாழ்த்துரைகளும் இடம்பெறும்.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களுககு நிதி வழங்கலும் இடம்பெறும்.

தொடர்ந்து பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச்சங்கப் பணிப்பாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அதிபர் வ.ஆறுமுகம் ஆகியோரின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றுத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(10-203)

# மக்கள் முகம்



வவுனியா, பம்மைமடுவில் அமைந்துள்ள சித்தமருத்துவ மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் நா.வர்ணகுலேந்திரன் அரச பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய சுதேச மருத்துவ அமைச்சினால் சித்தமருத்துவ நிபுணராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இலங்கை வரலாற்றில் இப்பதவி தமிழர்களுக்கு கொடுக்கப்பட்டது இதுவே முதற்றடவையாகும்.

அகில இலங்கை ரீதியில் இரண்டு சித்தமருத்துவ அதிகாரிகளுக்கு இப்பதவி இதுவரை கிடைத்தபோதிலும் மிகக் குறுகிய காலத்தில இத்தரத்தைப் பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், வடகிழக்கு மாகாண சேவையில் கடமையாற்றும் சித்தமருத்துவ உத்தியோகத்தர்களுள் இவர் மட்டுமே இத்தரத்தைக் கொண்டவர்.

இவர் தற்போது பொதுநிர்வாகத்துறையில் மூன்று மாதப் பயிற்சியினை இலங்கை நிர்வாக சேவையின் (SLAS) நிர்வாக உத்தியோகத்தர்களுடன் இணைந்து கொழும்பில் உள்ள இலங்கை நிர்வாக சேவை அபிவிருத்தி நிறுவகத்தில் பெற்று வருகிறார். (4)

★ ★ ★



வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்குப் புதிய அதிபராக இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவரும் இலங்கையின் பல பாகங்களிலும் பதினெட்டு வருடகாலம் அதிபராகக் கடமையாற்றியவருமான த.மாதவன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெ.இருதயநாதன் அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனம் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கடிதத்திற்கு அமைவாக வழங்கப்பட்டது. (4)

★ ★ ★



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு ஹெல்ப் ஏஜ் ("Help Age Srilanka") நிறுவனம் விவசாய துறையில் நீடித்த காலம் சேவையாற்றிய முதிய விவசாயிகளை கௌரவித்துத் தங்க விருது வழங்கியது.

கடந்த முதலாம் திகதி கொழும்பிலுள்ள அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் மண்டபத்தில் நடத்தப்பட்ட இவ்விழாவில், வட மாகாணத்தில் சிறந்த நெற்செய்கை விவசாயியும், விவசாய அபிவிருத்திக்குச் சிறந்த சேவையாற்றி வருபவரும், மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவருமான சி.பொ. வ.ம.க.முதலியாருக்குத் தங்கவிருது வழங்கப்பட்டது. (4-135)

★ ★ ★



இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் தேசிய ரீதியாக நடத்திய 'ஒழுங்காகச் சுத்திகரிக்கப்பட்ட கழிவுப் பொருளும் தேசியவளமும்' என்ற தலைப்பிலான தமிழ்மொழி மூலமான கட்டுரைப்போட்டியில் வட்டுக்கோட்டை மத்தியகல்லூரி மாணவியான செல்வி அம்பலவாணர் யோகினி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டார்.

அண்மையில் ஜாஎலவில் நடைபெற்ற விழாவில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரால் இவருக்கான பரிசு வழங்கப்பட்டது. (4-161)

★ ★ ★



கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த செல்வி அனுராதா சிதம்பரநாதன் இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கான 'சார்க் நாடுகளுக்கான தெற்காசிய நிதிய மதன்ஜித் சிங்' புலமைப்பரிசில் விருதைப் பெற்றுள்ளார்.

14.09.2004 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரிடமிருந்து இந்த விருதைப் பெறுக் கொண்டார்.

இவர் கல்வியங்காட்டைச் சேர்ந்த திரு. திருமதி சிதம்பரநாதன் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைமாணிப் பட்டதாரியும் ஆவார். (4)

# 'பொங்கு தமிழே' பாடல் இசைத்தட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.16

கனடா சிலம்பம் அமைப்பினர் உருவாக்கிய அரிமா அழகனின் 'பொங்கு தமிழே' பாடல் இசைத்தட்டு வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை காலை 4மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்புரையை பேராசிரியர் அ.சண்முகதாஸும், வெளியீட்டுரையை விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து நூற்பிரதியை சிலம்பம் அமைப்பின் தாயகக்கிளைத் தலைவர் கி.நடராஜா வெளியிட்டுவைக்க முதற்பிரதியை திருமதி இந்திரா தவநாயகம் பெற்றுக்கொள்வார்.

சிறப்புப் பிரதிகள் வழங்கலைத் தொடர்ந்து மதிப்பீட்டுரைகளை கலாநிதி சி.சிவலிங்கராஜாவும், பேராசிரியர் என்.சண்முகலிங்கனும், நிறைவுரையை கலைபண்பாட்டுக் கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் மு.வளநாடனும் நிகழ்த்துவர்.

பொங்கு தமிழே பாடல் இசைத்தட்டு சிலம்பம் அமைப்பினரால் இந்தவருட கரும்புலிநாள் நிகழ்வில் கனடா மொன்றியலில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(10-204-203)

# தரகர்களிடம் பணம் கொடுத்து ஏமாறாதீர் மேலதிக மாவட்டப் பதிவாளர் வேண்டுகோள்

பிறப்பு, இறப்புக்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ்.செயலகத்தில் தாராளமாக உள்ளன. எனவே, தரகர்களிடம் பணத்தைக் கொடுத்து ஏமாறாதீர்கள்.

இவ்வாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் மேலதிக மாவட்டப் பதிவாளர். பிறப்பு, இறப்புப் படிவங்கள் யாழ். செயலகத்தில் இல்லை என்று காரணம் காட்டித் தரகர்கள் பொதுமக்களிடம் விண்ணப்பப் படிவங்களை விற்பனை செய்து வருகின்றனர். இவர்களுடைய இந்த நடவடிக்கைகளினால் தமது தேவைகளை நிறைவேற்ற வரும் ஏழை மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இதனைத் தவிர்க்கும் முகமாக தேவையான விண்ணப்பப்படிவங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. தமது தேவைகளை நிறைவேற்ற வரும் பொது மக்கள் தரகர்களின் உதவியை நாடாது, நேரில் எமது அலுவலகத்திற்கு வருகைதந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம்.

இவற்றைப் பெறவிரும்புவோர் இலக்கம் தெரிந்த விண்ணப்பப்படிவம் என்றால் பிரதி ஒன்றுக்கு 5ரூபா முத்திரையும், இலக்கம் தெரியாத விண்ணப்பப்படிவங்களுக்குப் பிரதி ஒன்றுக்கு 10ரூபா பெறுமதியான முத்திரையும் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மேலும் தெரிவித்தார்.

(10-5)

உங்கள் மகிழ்ச்சியான புதிய வாழ்வு
மங்களகரமாக ஆரம்பிக்கட்டும்...
அற்புதமான அழைப்பிதழ்களோடு.....!



T.P: 021 222 6549
CELL: 0777 737438

இறக்குமதி செய்யப்பட்ட ஆயிரம் ஆயிரம் தெரிவுகள் சொற்ப விலையில்...!

போஸ்கோ நிறக்கலை பதிப்பகம்
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Wedding Bags, Cake Box with Superior Printing

boasco@yahoo.com

போஸ் காகிதாதியாளர்
03, நவீன சந்தை,
மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மாணவி

**செல்வி யரணிகா மயில்வாகனம்**

அவர்கள் 2004 ஆம் ஆண்டு 5 ஆம் தரப புலமைப் பரிசில் பரீட்சையில் 132 புள்ளகள் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன், இறையருள் பெற்று அவர் மேன் மேலும் கல்வியில் சிறப்படைய எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வருணன், அச்சுவேலி.

அம்மம்மா, அம்மா, அப்பா, தங்கச்சி, சிவதாசன் குடும்பம், சிவநேசன் குடும்பம், அப்பம்மா..

(37647) (34-42-19-18)

# வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

## மணல் விநியோக அறிவித்தல்

இன்று (16.10.2004) சனிக்கிழமை மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. இந்தத் திகதியை பெற்றவர்கள் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு வேறு திகதியைப் மாற்றிக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*உபய கதிர்காமம்,*
*புலோலி.*

**- நிர்வாகம்.**

(C/38231)(42-18-19)

# LONDON ENGLISH COLLEGE

No.105, Arasady Road, Jaffna.
T.P.: 021-222-5889, 0777-252180,0776-303539
E.mail:lecjaffnabranch @ yahoo.com

- CERTIFICATE IN ENGLISH
- DIPLOMA IN ENGLISH

Courses commence on 01.11.2004

| Week Days 8.30-12.30 | Monday | Wednesday | Friday |
|---|---|---|---|

| Week Ends | 2.00 - 5.00p.m. |
|---|---|
| Duration | Three months |

Basic Computer Skills taught For Week Days Students.

- O/L 2004 English Literature Revision classes on.

| Mondays | Wednesday | 4.00 - 6.00 p.m. |
|---|---|---|

- New Batch of **IELTS** commences in the first week of November.

Registrations ON....

**Principal.**

(C/38222)(42-18-19)

# நன்றி நன்றி நன்றி



யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய தமிழ் இலக்கியப் பெருவிழாவின் போது வரைகலை, ஒப்பனை, வர்ணப்புகைப்படம், நாடக மேடையமைப்பு ஆகிய பல கலைத்துறைகளைக் கௌரவிக்கும் முகமாக 2004 ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது எனக்கு வழங்கப்பட்டபோது மண்டபத்திற்குச் சமுகமளித்து, மாலைகள் அணிவித்து வாழ்த்திய அனைவருக்கும் மேலும் 13.10.2004 புதன்கிழமை இரவு எனது இ ல்லத்தில் நடைபெற்ற இராப்போசன விருந்தில் பங்குபற்றி, மாலைகள் அணிவித்துப் பரிசில்கள் தந்து என்னை மகிழ்வித்த உற்றார், உறவினர், நண்பர்கள், கலைஞர்கள், கிராமசேவகர், அதிபர்கள், ஆசிரியர்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள் ஆகிய சகலருக்கும் விசேடமாக என்னை இவ்விருதிற்கு அங்கீகரித்த ஆளுநருக்கும், கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், உதவிப் பணிப்பாளர் ஸ்ரீதேவி மற்றும் விருதுக்கான தேர்வுக்குழுவினர்க்கும், யாழ்ப்பாணக் கல்வி அலுவலக உத்தியோகத்தர் யாவருக்கும் என்மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

*1/1, நக்கா ஒழுங்கை,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

**பி.ஸ்ரனிஸ்லாஸ்,**
(கவின், கலை அரசு).

(37641)(42-18-19)

## சத்தியஞான மாநாடு

தென்மராட்சி,ஒக்.16

சாவகச்சேரி, பெரியமாவடி வித்தகத்தினால் சமரச சுத்த சன்மார்க்க சத்தியஞான மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி தொடக்கம் வித்தக மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

'குளையூரான்' சடா மார்க்கண்டு தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில், வரவேற்புரையினை மாவை செ.நவரத்தினமும் அருளுரையை வித்தக குருமணி கா.பரமசாமியும் நிகழ்த்துவர்.

தென்னிந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்நத முன்னாள் கடலூர் மாவட்ட துணை ஆட்சியாளர் ஜோதிமுருகன் வள்ளலாரும் திருவருட்பாவும் என்னும் பொருளிலும் -

சிங்கப்பூர் பொறியியலாளரும் வள்ளலார் அறப்பணி நிலையைத் தலைவருமாகிய சிவகுமார் 'ஜீவ காருண்யமே தெய்வ வழிபாடு' என்னும் பொருளிலும் சிறப் புரையாற்றுவர்.

இசைக் கலைமாணி தவநாதன் றோபேட் தலைமையில் இசைநிகழ்வும் இடம்பெறும்.

(10-117)

## நாய்களுக்குத் தடுப்பூசி

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும், அரசினர் கால்நடை வைத்திய நிலையமும் இணைந்து எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாண்டான் சனசமூக நிலையத்தில் காலை 9.30மணி தொடக்கமும் -

கரணவாய் அண்ணாசிலையடி சனசமூக நிலையத்தில் முற்பகல் 11 மணி தொடக்கமும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளன. (10-173)

## சாரண வார சைக்கிளோட்டம்

பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் இலங்கை சாரணர் சங்க தேசிய சாரண வாரத்தையொட்டி நடத்திய சாரணர்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியைச் சேர்ந்த நா.நகுலேஸ்வரன் முதலாமிடத்தையும், கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியைச் சேர்ந்த கு.ஜனாவிந் இரண்டாமிடத்தையும், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியைச் சேர்ந்த செ.சிவகரன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (10-173)

## பாடசாலைக்கு வீடியோக் கமெரா

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கு கனடாவில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவர் ஒருவர் வீடியோக் 'கமெரா' ஒன்றை வழங்கியுள்ளார். இது இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியுடையது என்று தெரிவிக்கப்பட்டது. வல்வையைச் சேர்ந்த தெய்வச் சந்திரன் என்பவரே இதனை வழங்கியுள்ளார். (70-204)




செல்வன் **லக்ஷிகன்**

புங்குடுதீவைச் சேர்ந்தவர்களான திரு.திருமதி ரவீந்திரன் -ராதிகா தம்பதிகளின் செல்வப் புதல்வன் லக்ஷிகன் தனது முதலாவது பிறந்த தினத்தை வட்டக்கச்சியிலுள்ள தமது இல்லத்தில் கடந்த 12.10.2004 செவ்வாய்கிழமையன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

செல்வன் லக்ஷிகனை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா (பருத்தித்துறை), அத்தை மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்அனைவரும் ஸ்ரீ ரங்கநாதப்பெருமாள் அருள் பெற்றுப்பல்லாண்டு காலம் சகல செல்வங்களோடும் சீரும் சிறப்புமாய் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றார்கள்.

*சந்தை அருகில்*
*வட்டக்கச்சி,*
*கிளிநொச்சி.*

தகவல்:
இரா.ரவீந்திரன்
(தந்தை).

(C/38224) UTHAYAN Graphics

# பிறந்த தினத்தில் ஆசானை நினைவு கூருகின்றோம்



தோற்றம் 16 10 1952

மறைவு 04 09 2004

அமரர்
# அருணாசலம் யோகானந்தா
B.Sc.(Cey.) Dip.in.Edu.)

(தென்மராட்சி கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் பௌதிகவியல் ஆசிரியர்)

எம்மை
ஏற்றிவைத்த ஏணிப்படி ஒன்று
எம்மை விட்டுச் சென்றது!
பௌதிகத்தின் நுட்பத்தை
எம்முள் புகுத்திய ஆசானே!

நட்புடன் எம்மை அரவணைத்த குருவே!
எம்மைத் தவிக்கவிட்டு எங்கே ஐயா
சென்றுவிட்டீர்......
நிஜமாக நீர் எம்முடன் இல்லை எனினும்
சுவாசமாக எம்முள் கலந்துள்ளீர்.

எமது பேராசானின் பிறந்த நாளில் அவரை நினைவு கூருவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உம் நினைவுடன் :-
விஞ்ஞானபீட மாணவர்கள், யாழ். பல்கலைக்கழகம்.

(37642) UTHAYAN Graphics

உதயன்

# (ஏ) மாற்று யோசனை

'தூங்குபவனை எழுப்பலாம். தூங்குபவன் போல நடிப்பவனை எழுப்புவது கடினம்' - என்பார்கள்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான அமைதிப் பேச்சுகளை மீளத் தொடங்கும் விடயத்தில் அரசுத் தரப்பின் நடிப்பு மேற்படி நிலைப்பாட்டைத் தான் நினைவூட்டுகின்றது.

அரசுக்கு முன்னால் உள்ள விடயங்கள் எல்லாம் அரசுக்குத் தெரியாதது போல - புரியாதது போல - அரசு தூங்கிக் கொண்டிருக்கின்றது என்ற மாதிரியில் - கதை அவிழ்த்து விட்டிருக்கின்றார் அரசுத் தரப்புப் பேச்சாளரும் மூத்த அமைச்சர்களுள் ஒருவருமான மங்கள சமரவீர.

"இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசின் மாற்று யோசனைகள் தயாராகிவிட்டன. விரைவில் அவை புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும். அவர்களிடமிருந்து சமிக்ஞை கிடைத்ததும் பேச்சு மீண்டும் ஆரம்பிக்கப்படும்." - என்று ஏதோ தூக்கத்திலிருந்து இப்போதுதான் எழுந்து வருபவர் போலக் கதை விட்டிருக்கின்றார் அமைச்சர் மங்கள சமரவீர.

இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு குறித்துப் பேச முன்னர் இடைக்கால ஏற்பாடு குறித்து முதலில் பேசி இணக்கம் காணவேண்டும் என்பதை அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புமே ஏற்றுக்கொண்டுள்ளன.

இதனடிப்படையில், இடைக்கால நிர்வாகத்துக்கான மூன்று யோசனைகளை முன்னைய இலங்கை அரசு வரிசையாக முன்வைத்திருந்தது. அவற்றில் இரண்டை ஏற்கனவே புலிகள் நிராகரித்துவிட்டனர். மூன்றாவது யோசனையை நிராகரித்துவிட்டாலும், அதற்குப் பதிலாக மாற்றுயோசனை ஒன்றை 'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபு' என்ற பெயரில் புலிகள் முன்வைத்தனர்.

அதைப் புலிகள் முன்வைத்து இப்போது ஏறத்தாழ ஒரு வருடமாகின்றது.

ஆக, இப்போது பேச்சுக்குத் தயாராக - இடைக்கால நிர்வாகம் தொடர்பாக - அரசுத் தரப்பிலிருந்து ஒரு யோசனையும் புலிகள் தரப்பிலிருந்து ஒரு யோசனையுமாக இரண்டு யோசனைத் திட்டங்கள் உள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டியதுதான் மிச்சம்.

அப்படிப் பேச்சைத் தொடங்குவதற்கு முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு தயாராக இருந்த சமயத்தில் தான், அந்த அரசின் முக்கிய அமைச்சுக்களைத் தாம் தமது அதிகாரத்தின் வாயிலாக பிடுங்கி எடுத்ததன் மூலமும், சில மாதங்கள் கழித்துத் தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த அரசை வீட்டுக்கு அனுப்பியதன் மூலமும் பேச்சுக்கான வாய்ப்பைக் குழப்பியடித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இப்போது விட்ட இடத்திலிருந்து பேச்சை ஆரம்பிக்க வேண்டியதுதான் யதார்த்தத்தில் சரியான விவகாரம்.

அதை விடுத்து, இடைக்கால நிர்வாகத்துடன் இறுதித்தீர்வு குறித்தும் சமாந்தரமாகப் பேசப்பட வேண்டும் என்ற புதிய சர்ச்சையைக் கிளப்பி சற்றுக் காலத்தை இழுத்தடித்தார் ஜனாதிபதி.

இப்போது அவரது அரசு தன்பாட்டில் மாற்று யோசனைகள் என்ற 'புதுக் கயிறு' விடுகின்றது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஏற்கனவே அரசுத் தரப்பினால் ஒரு யோசனை முன்வைக்கப்பட்டு, அது நிலுவையில் உள்ளது. அதற்கு மாற்றாக மாற்று யோசனை ஒன்றைப் புலிகள் முன்வைத்திருந்தனர்.

இன்னும் ஒரு புதிய மாற்று யோசனையை அரசுத் தரப்பிலிருந்து வைக்கத் தேவையில்லை - வைக்க முடியாது - என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்கனவே திட்டவட்டமாக - தெளிவாகக் - கூறியிருக்கின்றார்.

ஆனால், இப்போது மாற்று யோசனைக்கு மாற்று யோசனை என்கிறது அரசு.

ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அரசு ஒவ்வொரு தடவையும் மாறும்போதும் சமர்ப்பிக்கப்படும் யோசனையும் மாறும் என்ற மாதிரியான கொள்கை நிலைப்பாட்டை அரசுகொண்டுள்ளதோ என்னவோ?

எது எப்படியென்றாலும் பேச்சு மேசையில் எதிர்புறத்திலிருக்கும் மறுதரப்பின் இணக்கமின்றி தம்பாட்டில் மாற்று யோசனைகள் என்று 'புருடா' விடுவதும் அதை சமர்பித்ததும் புலிகள் பேச்சு மேசைக்கு வந்து விடுவார்கள் என்பது போலக் கனவு காண்பதும் புலிகளின் 'சமிக்ஞை' கிடைத்ததும் சமாதானப் பேச்சு ஆரம்பமாகும் என்று 'கதை அளப்பதும்' அரசுத் தரப்பு தூங்குபவன் போல் நடிக்கிறது என்ற நிலைப்பாட்டைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

இது காலத்தை இழுத்தடிக்கும் மற்றொரு தந்திரமேயன்றி - உத்தியேயன்றி - வேறில்லை.

மாற்று யோசனை என்ற பெயரில் ஏமாற்றுத் திட்டம் தான் தயாராகின்றது. காலத்தை வாங்கித் தமது அரசியல் நோக்கங்களை எய்துவதற்கான தந்திரமாகவே இதனை நோக்க வேண்டும்.

---

கல்வி அமைச்சில்

# தமிழ்மொழி மூலக் கல்வியின் அபிவிருத்திக்கு தனியான பிரிவொன்று உருவாக்கப்படும்

## கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.16

கல்வி அமைச்சில் தமிழ்மொழி மூலக் கல்வியின் அபிவிருத்திப் பணிகளைக் கவனிப்பதற்கென இன்னும் ஒரு மாத காலத்துக்குள் தனியான பிரிவு ஒன்று இயங்கவுள்ளது.

- இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் உறுதியளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவுடனான சந்திப்பிலேயே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்த 16 கோரிக்கைகள் தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தவெனச் சங்கத்தின பொதுச் செயலாளர் த.மகாசிவம் தலைமையில் நிர்வாகச் செயலாளர் எஸ்.சரவணபவானந்தன், துணைத் தலைவர் இரா.ஜெயசீலன், மத்திய மாகாணப் பத்திரிகைச் செயலாளர் தி.கணேசராஜா மற்றும் ஊவா மாகாணச் செயலாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் ஆகியோர் அடங்கிய குழுவினர் அமைச்சின் செயலாளரைச் சந்தித்தனர்.

அச்சந்திப்பின்போது தனிப்பிரிவு தொடர்பாக உறுதியளித்த செயலாளர், மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மொழி மூலக் கல்வி தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விசார ஊழியர்கள் ஆகியோருக்கு பிரச்சினைகள் இருப்பதையும், வடக்கு - கிழக்கில் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்குப் பற்றாக் குறை இருப்பதையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன். இவற்றை விரைவில் தீர்ப்பதற்காகவே தனிப் பிரிவொன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளேன்.

தமிழ் மொழிப் பாடநூல்களில் இலங்கைத் தமிழரின் வரலாறு பற்றித் திரித்து எழுதப்பட்டிருப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி தேசிய கல்வி நிறுவகத்துக்கும், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் பணிப்புரை விடுக்கின்றேன்.

நிரந்தர நியமனம் வழங்கப்படாதிருக்கும் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 160 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சிடமிருந்து விவரங்களைப் பெற்று, பொதுச் சேவை ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்து ஆவனசெய்ய நடவடிக்கை எடுப்பேன்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது குறித்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தற்போது அமைக்கப்பட்டுள்ள விசேட செயலணி கவனம் செலுத்தும் - என்று தெரிவித்துள்ளார். (10-202)

---

# பஸ்ஸிலிருந்து விழுந்தார் பெண்; நட்டஈடு செலுத்தினார் சாரதி!

யாழ்ப்பாணம்,ஒக்.16

மினிபஸ் சாரதியின் அவதானக்குறைவால் பெண் ஒருவர் ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து சடுதியாகக் கீழே விழுந்தார். இதனால் சம்பந்தப்பட்ட மினிபஸ் சாரதி பிரஸ்தாப பெண்ணுக்கு நஷ்டஈடாக 5 ஆயிரம் ரூபாவைச் செலுத்தநேரிட்டது.

நேற்று நண்பகல் யாழ். ஸ்ரான்லி வீதியில் கஸ்தூரியார் வீதிச் சந்திக்குச சமீபமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நிறுத்தப்பட்ட பஸ்ஸிலிருந்து பிரஸ்தாபப் பெண் இறங்கமுற்பட்ட வேளை பஸ் சாரதி திடீரென பஸ்ஸை எடுத்தார் என்றும் - இதனால் அந்தப் பெண் நிலத்தில் வீழ்ந்து காயமடைந்தார் என்றும் கூறப்பட்டது.

இதனை அங்கு வீதி ஒழுங்குபடுத்தல கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் அவதானித்தனர். உடனடியாக அங்கு சென்று, காயமடைந்த பெண்ணிடமும், பஸ்சாரதியிடமும் விசாரணைசெய்தனர்.

முடிவில், சாரதியின் அவதானக்குறைவே இந்த விபத்துக்குக் காரணம் என்று தீர்மானித்த பொலீஸார் அவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபாவைப் பெற்று சம்பந்தப்பட்ட பெணணுக்குக் கொடுத்தனர். (4-6)

---

# விதைநெல் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

வலி.தெற்கு,ஒக்.16

பெரும்போகத்துக்குத் தேவையான விதைநெல்லை விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு உடுவில் கமநலசேவை நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி விவசாயிகளுக்கு தேவையான மூன்று, மூன்றரை மாதத்தில் விளையக்கூடிய ஏ.ரி. 353ரக விதைநெல் தற்போது உடுவில் கமநல சேவை நிலையத்தால் தருவிக்கப்பட்டுள்ளது.

விதைநெல் தேவைப்படும் விவசாயிகள் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - உடுவில் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன் அறிவித்துள்ளார். (எ-152)

---

# மாகாணக் குடும்ப நல அலுவலர்களுக்கு திங்களன்று பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழமொழிமூல குடும்பநல உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கான பயிற்சி நெறி நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் இ.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். இது விடயமாக அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த ஜூன் மாதம் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பிரகாரம் இந்தப் பயிற்சிக்கு பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட ஒரு தொகுதிக் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு திங்களன்று யாழ்ப்பாண வைத்தியசாலையிலுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும்.

மற்றொரு தொகுதியினர்களுக்கான பயற்சிகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும்

இதேவேளை - வவுனியா, மட்டக்களப்பு பயிற்சி நிலையங்களிலும் திங்களன்று பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுளளது - என்றார். (எ-13)

---

# வலி.தென்மேற்கில் நால்வருக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு,ஒக்.16

ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் மாத வருமானம் பெறுவோருக்கான அசையும், அசையாச் சொத்துக்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் நான்கு பேருக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் தங்கள் விண்ணபத்தில் குறிப்பிட்ட வங்கிக் கணக்குக்கு இந்தக் கொடுப்பனவு யாழ்.செயலக புனரமைப்பு, புனர்வாழ்வு பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

75 ஆயிரம் ரூபா தமக்கு நட்டம் ஏற்பட்டதாக அதற்கான சான்றிதழ்களுடனும், பொலீஸ் நிலையப் பதிவுடனும், வீடமைப்பு அதிகார சபையின் சிபார்சுடனும் விண்ணப்பம் அனுப்பி ஓய்வூதியம் பெறும் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாவே நட்டஈட்டுக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்பித்த தொகையிலும் பார்க்க மிகவும் குறைந்த தொகையே இவர்களுக்குக் கிடைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. (எ-135)

---

# வீரமணி ஐயரின் பாடல்கள் அடங்கிய ஒலிநாடா நாளை இணுவிலில் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.16

இணுவில் சிவகாமி அம்மன் கோவில் பற்றி அமரர் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயரால எழுதப்பட்ட பாடல்கள் அடங்கிய ஒலிநாடாவின் அறிமுகவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3மணிக்கு இணுவில் சிவகாமி அன்னதான மண்டபத்தில் இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தினரால் நடத்தப்படவுள்ளது.

இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின் வெளியீடான 'அறநெறிக் களஞ்சியம்' என்னும் நூலில் சிவகாமி அம்பாள் பெருமைகளை பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் பாடல்களாக எழுதியிருந்தார்.

அந்தப் பாடல்கள் இந்தியப் பாடகி 'மகாநதி சோபனா'வால் பாடப்பட்டு இணுவிலைச் சேர்ந்தவரும் கனடாவில் வசித்து வருபவருமான து.நடராஜாவின் முயற்சியால் கடந்த செப்ரெம்பர் 3ஆம் திகதி கனடாவிலுள்ள இணுவில் திருவூர் ஒன்றியத்தால் வெளியிட்டு வைக்கப்பட்டது. அந்த ஒலிநாடாவின் அறிமுகவிழாவே நாளை இணுவிலில் நடைபெறவுள்ளது. இதன் மூலம் பெறப்படும் நிதி இணுவில் சிவகாமி அம்மன் கல்யாண மண்டபக் கட்டட நிதிக்குப் பயன்படுத்தப்படவிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-202)

---

# வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மழைநீர் சேகரிப்புத் திட்டம்

வலி.தென்மேற்கு,ஒக்.16

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இப்பிரிவில் குடிதண்ணீர் வசதி இல்லாத பகுதிகளிலிருந்து இதற்கென 150 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் -

இக்குடும்பங்களுக்கு நீர் வழங்கு அதிகார சபையின் அனுசரணையுடன் மழை நீர் சேகரிப்பு உபகரணங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன என்றும் -

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா இது பற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியிலிருந்து இத்திட்டம் வரட்சி மிகுந்த பிரதேசங்களில் நடைமுறைபடுத்தப்பட்டு வருவது தெரிந்ததே. (எ-135)

---

## நாளை

ஐப்பசி 01
ஞாயிற்றுக்கிழமை
(17.10.2004)
திதி: சதுர்த்தி
பின்னிரவு 2.17 வரை
நட்சத்திரம் : அனுஷம்
முற்பகல் 11.08 வரை
சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 04.32 - 06.02
சதுர்த்தி விரதம்
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நீ எங்கே போகிறாய் என்பது உனக்கே தெரியாதிருக்குமானால் நீ எந்த வழியில் வேண்டுமானாலும் போகலாம்.

---

# தபால் வாரத்துக்கான பதாகைகள்

வலி.தென்மேற்கு,ஒக்.14

உலக தபால் வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள தபால் அலுவலகங்களின் முன்றிலில் 'உலக தபால் வாரம்' என்ற பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்பு தபால் அலுவலகம், மானிப்பாய் தபால் அலுவலகம் ஆகியவற்றின் முன்றிலில் - பிரதான வீதியில் - இப்பதாகைகள் கட்டப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. (எ-135)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Toyota Hiace LH113 DX Model வான், பல விசேட அம்சங்களுடன் கூடிய மிக உறுதியான ஆட்டுக்கல் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.134, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.T.P.: 021-222 5145. (37637)

நல்ல நிலையில் உள்ள சாளி மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 7/1, உடையார் ஒழுங்கை, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (37643)

## காணி விற்பனைக்கு

இல.180, கஸ்தூரியார் வீதியிலுள்ள ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொளளவேண்டியமுகவரி: ஜெயந்தன் கருணா, இல.180, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (37634)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Pure Bred, Dobermann, Pincher, Pure Bred, Great Dane நாய்க்குட்டிகள் உடன் விறபனைக்குண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு),19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37512)

## கோழிக்குஞ்சு விற்பனை

நல்ல தரமான, வளர்ந்த Original Prima பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு),19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37511)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி தினமும் விற்பனைக்குண்டு. 1Kg-120/- கல்பேட் 1Kg-130kg சுத்தம் செய்துகொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி.

(37646)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான, இரண்டுமுறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள் 35/-, பேட்டுக்குஞ்சு 50/- 25.10.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக்கிளையிலும், சூட்டிபாம் - வட்டுக்கோட்டை, R.S.K பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி38212)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், விசாக நட்சத்திரம், கிரகபாவம் 30, 27 வயதுடைய, தனியார் கூட்டுறவு அச்சகத்தில் பணிபுரியும் மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. சீதனம் பேசித்தீர்மானிக்கப்படும். ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். விள.இல:2407, மே/பா உதயன். (37515)

## சேவை

55,000 அமெரிக்க நிரந்தர விசா லொத்தர் Latest விண்ணப்பப் பூரண விவரங்களை VPP மூலம் பெறத்தொடர்புகொள்க. B2/F23 Bloeraendhal Flats, Colombo-13.T.P.:077 3081764, 2438367. (சி-38223)

## இராமநாதன் கல்லூரியில் கருத்துரை

யாழ்ப்பாணம்,ஒக்.16

ஆஸ்திரேலியா பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையத்தின் இயக்குநர் பி.கே. சார்ள்ஸ் ஹோக் 'சுபீட்சமான வாழ்வுக்கு சுயகண்ணியமே திறவுகோல்' என்னும் தலைப்பில் நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் கருத்துரை நிகழ்த்தவுள்ளார்.

இலங்கை பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் இவ்விரிவுரை நடைபெறுகிறது.

ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(10-173-204)

# நவராத்திரி விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.16

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடத்திவரும் நவராத்திரி விழாவின் மூன்றாம்நாள் நிகழ்வு இன்று மாலை 5.30மணிக்கு அமைச்சின் மதியுரைஞர் செல்வி மகேஸ்வரி வேலாயுதம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்றுத் தொடர்ந்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, கொழும்பு சின்மயா மிஷன் ஆச்சாரியார் பிரமச்சாரி ரமணசைத்தன்யா ஆகியோரின் உரைகளும் இடம்பெறும்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (10-203)

★ ★ ★

இந்துசயம கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்திவரும் நவராத்திரி விழாவின் மூன்றாம்நாள் நிகழ்வுகள் இன்று மாலை 4 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து ஓகன் இசைப் பக்தி கீதங்கள் இசைக்கப்படும்.

(10-204)

## நடன வகுப்பு நடத்த ஏற்பாடு

வலி.தென்மேற்கு,ஒக்.16

சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களின் நலன்கருதி நடன வகுப்பு ஒன்று அடுத்தவாரம் தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வித்தியாலய ஆசிரியக் கழகத்தின் அனுசரணையுடன் இதற்கென, நடன ஆசிரியர் ஒருவர் நியமனம்செய்யப்பட்டுள்ளதாகவும் -

எதிர்வரும் விஜயதசமி தினத்தன்று இந்த நடனவகுப்பு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் - வித்தியாலய அதிபர் இதுபற்றி தகவல்தருகையில் தெரிவித்தார்.

(எ-135)

இன்று 16.10.2004 முதல் 11.11.2004 வரை
**தீபாவளி மலிவு விற்பனை**
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
**விசேட கழிவு**
உடனே விஜயஞ்செய்யுங்கள்:
**லைடன் புடைவை நிலையம்**
இல.410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ்நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
☎ 222 2381 (C/38230)(42-34-14-15-)

## டேடன்ஸ் சம்பந்தர் ஆய்வுகூடம்
## தேவை

I. MS OFFICE கணனி அறிவுடைய கிளினிக் வேலைசெய்ய விரும்புபவர் (பெண்).
II. ஆய்வுகூடத்தில் வேலைசெய்வதற்கு பயிலுநர் (ஆண்).
(கொழும்பில் ஊதியத்துடன் கூடிய பயிற்சி 2 மாதம்)
நேர்முகப் பரீட்சை 17.10.2004 ஞாயிறு மதியம் 12 மணி

**சம்பந்தர் கிளினிக்**
*(யாழ். இலங்கை வங்கிக்கு அருகில்)*
574/1, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(37638)(34-14-15)

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை சிவப்பிரகாசம்

*{இளைப்பாறிய கணக்குப் பரிசோதகர், இலங்கை அரச மருத்துவமனை* (Hospital Auditor)}



கரணவாய் தெற்கு, மூத்த விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை சிவப்பிரகாசம் 09.10.2004 சனிக்கிழமை London இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை -சின்னத்தங்கம் தம்பதிகளின் அருமை மருமகனும் இராசம்மாவின் பாசமிகு கணவரும் தமயந்தி, தவநேசன், தவராணி, தவமலர், தவக்குமார், தவநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தகுமார், நிறைஞ்சலா, பிறேமதாஸ், ரவிதாஸ், பிரதீபா, சங்கீதா ஆகியோரின் மாமனாரும் ராசிகா, நிவேஷ், சுபாஷ், நிவர்ஜினி, சுகன்ஜா, சிந்தியா, அனுஜன், இந்துமதி, வான்மதி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், பரமலிங்கம், சிந்தாமணி, அழகம்மா, நடராஜா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், மாணிக்கம் ஆகியோரின் மைத்துனரும் வேலும்மயிலும் செல்வராணியின் சிறிய தகப்பனாரும் தனராஜசேகரின் அன்பு ஐயாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2004) ஞாயிற்றுக் கிழமை London இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

T.P. :00442087659003.

தகவல்:
M.ரவிதாஸ் (மருமகன்).

(3…25)(29-14-15-34)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

## தேவை

★ திரைச்சீலை (Curtain) காட்சி அறைக்கு படித்த, ஓரளவு அனுபவமுள்ள மேற்பார்வையாளர் தேவை. (இருபாலாரும்) அனுபவம் வாய்ந்தவர்க்கு முன்னுரிமை.
★ அலுவலக உதவியாளர் (Peon) (25 வயதிற்கு உட்பட்டவர்கள்)
தொடர்பு: T.P. 0777 563946
077 3013239
(37603)

## உடன் தேவை
(தையல் வேலை)

தையல்வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை.
கோப்பாய் பிரதேச சபைப் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு முன் உரிமை.
**T.P.:0777 563946**
**077 3013239** (37602)

# கண்ணீர் அஞ்சலி

யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி சி.ஜெயக்குமார் அவர்களின் அன்புக் கணவர்

**இ.ஜெயக்குமார்**

அவர்களின் மறைவையிட்டு மனம் கலங்குகின்றோம். அன்னாருக்கு எம் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம், மீசாலை. (37627)(34-14-15) பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# நான்காண்டு நினைவலைகள்



அமரர்
**சுந்தரம் யோகானந்தா**

மண்ணில் 20.10.1954 — விண்ணில் 30.09.2000

திதி: திருதியை 16.10.2004

நான்காண்டுகள் சென்றதுவே
நாளெல்லாம் நினைவுகளுடன்
நாமெல்லாம் வாழ்கிறோமே!

**மனைவி, பிள்ளைகள்.**

நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (37635) (34-14-15)

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the undermentioned posts.

**Faculty of Medicine**

1. **Professor** in Anatomy/Community Medicine/Pathology/Forensic Medicine/Medicine/Pharmacology/Obsterics & Gynaecology/Paediatrics/Surgery.
2. **Senior Lecturer Grade I/Senior Lecturer GradeII /Lecturer (Probationary)** in Anatomy/Biochemistry/Physiology/Community Medicine/Pathology/Parasitology/ Forensic Medicine/ Pharmacology/Psychiatry/Paediatrics/Obstetrics and Gynaecology/ Medical Education.
3. **Chair** in Oncology/Orthopedics
4. **Clinical Psychologist**

**Faculty of Engineering**

**Professor /Associate Professor/Senior Lecturer Gr.I** in Civil Engineering

**Faculty of Arts**

**Senior Lecturer Gr.II /Lecturer (Probationary)** in Dance (Bharathanatiyam)/Music (Vocal/Violin/Miruthangam)
**Instructor Gr.II** in Dance (Miruthangam/Vocal).

**Department of Siddha Medicine**

**Senior Lecturer Gr.I /Senior Lecturer Gr.II/Lecturer (Probationary)** in Siddha Medicine.

**Faculty of Applied Science - Vavuniya Campus**

**Senior Lecturer Gr.I /Senior Lecturer Gr.II/Lecturer (Probationary)** in Biological Science.

| POST | SALARY SCALE |
|---|---|
| Professor | Rs.28,050-8x605-32,890/-p.m. |
| Associate Professor | Rs.25,355-8x605-30,195/-p.m. |
| Senior Lecturer Grade I | Rs.23,650-8x525-27,850/-p.m. |
| Senior Lecturer Grade II | Rs.20,160-5x525-22,785/-p.m. |
| Lecturer(Probationary) | Rs.13,070-1x375;9x415-17,180/-p.m. |
| Clinical Psychologist | Rs.13,070-1x375;9x415-17,180/-p.m. |

*Note:* In Addition to the above an academic allowance of 30% of the salary and other allowances approved by the University Grants Commission will also be paid.

*Statutory Benefits*

i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
iii) Gratuity payments
iv) Employees Trust Fund benefits.
v) Free Medical Services

Closing date of applications for Professors will be **31.12.2004** and others will be **30.11.2004.**

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.20/- per form,. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/Postal order drawn in favour of the 'Bursar, University of Jaffna" together with a self - addressed stamped envelop 23x30 cm in size.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**VICE-CHANCELLOR**
***UNIVERSITY OF JAFFNA***
***SRILANKA.***
13.10.2004 (சி-38215)(34-14-15)

சன நூலகம் யாழ்ப்பாணம்

# இலக்கிய கர்த்தாவாய், நடிகனாய் வாழ்ந்து

எம்முடன் வாழ்ந்தவர்களை உயிரோடிருந்த காலத்தைவிட, எம்மைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்த பின்னரே நினைத்துப் பார்க்கிறோம்.

அவர் செய்த ஒவ்வொரு 'நல்லதும்' அவரைப் பிரிந்த வேளையிலும் நினைத்துப்பார்க்க வைக்கிறது, நெகிழ்ந்து பேசவைக்கிறது. அந்த வகையில் நினைத்துப் பார்க்கவைக்கும் ஒருவர்தான் சிலோன் விஜயேந்திரன்.

இவர் ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வயரவிளானுக்குப் பெருமை சேர்த்தவர். பெருமை சேர்த்தவர். ஈழத்தின் பெயர்பெற்ற கவிஞர் கல்லடி வேலனின் பேரன். மூத்த பத்திரிகையாளர். இ.ஸ்ரீ நடராஜாவின் சகோதரர்.

இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர், இராஜேஸ்வரன், தனது அருமைச் சகோதரி விஜயலட்சுமியின் மறைவின் பின் தனது பெயரை விஜயேந்திரன் என மாற்றிக்கொண்டார்.

மாற்றங்கள் மனிதனைப் 'புடம்' போடுகின்றன. தனது வாழ்வை கலைப்பயணமாக மாற்றிக்கொண்ட இவர்,தனது அறிவுக்கும் ஆற்றலுக்கும் இந்திய மண்ணிலே செயல்வடிவம் கொடுத்தார்.

எல்லோரையும் போலவே இவரது வாழ்விலும் பல்வேறு சோதனைகள் ஏற்பட்டன. எனினும், அவர் அவற்றைக்கண்டு சளைக்காது போராடி நவரசக் கலைஞனாக, சிறந்த நடிகனாக, இலக்கியவாதியாக, பத்திரிகையாளனாக யாவரும் பேசும் நிலைக்கு, நினைக்கும் நிலைக்கு உயர்ந்தார்.

கவிஞர் கம்பதாசன் பாடல்களைத் தேடித் தொகுத்து அவரைப்பற்றி சமூகத்திற்கு அறிவித்து, அவர் புகழை வாழவைத்த பெருமைக்குரியவர். அதுமட்டுமன்றி பாரதியின் வரலாற்றை நாடகமாக எழுதி நாடகத்துறைக்கும் வலுச் சேர்த்தவர்.

நவரச நடிகரான இவரைப்பற்றி கவியோகி சுத்தானந்த பாரதி குறிப்பிடுகையில்:-

'இலங்கையிலிருந்து வந்து என்னுடனே தங்கி வாழ்ந்து திரையிலும், மேடையிலும் புகழ் பெற்றுவரும் விஜயேந்திரன் நடையில் நீரோட்டமுள்ளது. இவர் திரையில் முரடனாக நடித்து முரட்டுப் புகழ் பெறுகிறார். ஆனால், அன்புள்ளங்கொண்டு அகமகிழும் பண்புடையவர்' என பகிர்கிறார்.

இவர் கவிதைத் தொகுப்புகள் பலவற்றையும் வெளியிட்ட கவிஞர். ஈழப்போராட்டம் மட்டுமல்ல இவரது கருப்பொருள். 'காதல்', கண்ணீர், சோகம் பற்றியும் சுவையாகக் கவிதை பாடியுள்ளார். புள்ளிகளைக் கோலங்களாக்கும் பெண்போல நல்ல சிந்தனைகளை ஒன்று சேர்த்து அழகாக ஒழுங்குபடுத்தி அழகுடன் இவர் தந்துள்ளார். இவரைப் பற்றி உவமைக் கவிஞர் சுரதா குறிப்பிடுகையில்:-

'கண்ணீரிலும் இரத்தத்திலும் நனைந்து கொண்டிருக்கிற இலங்கைத் தீவிலேயே இப்படியொரு கவிஞர்' காட்சியளிப்பது மகிழ்ச்சி தருகிறது என்கிறார்.

கவியரசு வைரமுத்து ஈழத்து கலை இலக்கியவாதியான நண்பர் சிலோன் விஜயேந்திரன் வெறும் கலைஞர் மாத்திரமலலர். உயிருக்குள் தென்றலாய் வீசும் ஓர் உன்னத கவிஞர் என்கிறார். இதையே சிலோன் விஜயேந்திரனின் கவித்திறனை சாற்றுகின்றன.

## ஈழத்துக்குப் பெருமை சேர்த்த 'சிலோன்' விஜயேந்திரன்

செயல்வீரரான இவர், இரத்தத்திலும் கண்ணீரிலும் நனைந்துகொண்டிருந்த ஈழத்திற்கு உறவுப்பாலமாய், 'சிலோன்' எனத் தனது பெயருக்கு முன்னால் எழுதி ஈழத்தவனாய் அடையாளம் காட்டினார். இலக்கியத்தை உயிர்மூச்சாகக் கொண்டு இவர் எழுதிய பல நூல்கள், இன்றும் எம்முடன் வாழ்கின்றன.


இந்தியாவில் இருந்துகொண்டே ஈழப் போராட்டத்திற்கு ஆதரவு தரும் கவிதைத் தொகுப்புகளை இவர் வெளியிட்டார். இவரது 'ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை வரலாறு' என்ற நூல் இன்றும் ஈழப்புலவர் மேற்கொண்ட சாதனைகளைச் சாற்றி நிற்கிறது. தற்கால தமிழிலக்கிய வாதிகளுக்கு இவரது நூல்கள் வழிகாட்டியாய் அமையும்.

ஒரு காலத்தில் பிரபல்யமாகி இருந்து பதிவின்றி மறைந்துபோன எத்தனையோ சினிமாப் பாடல்களை அச்சேற்றிய பெருமை இவருக்கு உண்டு. இவருக்குத் தமிழக சினிமா பற்றிய பரந்த அறிவும், விமர்சனப் பார்வையும் உண்டு. இதனால்தான் சிறந்த நடிகனாக முத்திரை பதிக்கமுடிந்தது.

உற்றமும் சுற்றமும் பகைகொண்டுமோதும் இக்காலத்தில் முற்றிலும் புதிய உலகாகிய அடையாறில் வாழ்ந்து, நண்பனாய் பண்பாளனாய், சுற்றத்தவர் மனதில் இடம்பிடித்தவர். காலன்கொண்டு சென்றபோதும் கண்ணீரில் கரைந்து மனசெல்லாம் நிறைந்துவிட்ட பெருமைக்குரியவர்.

**- மதியழகி**

சிலோன் விஜயேந்திரன் நல்லதோர் நடமாடும் கலை, கவிதைத்துறை ஆசானாக விளங்கினார். இவர் காட்டிய விருந்தோம்பல் அவர் நினைவை நிலைத்து நிற்கச்செய்யும் என்பதை 'நல்லுலகினிலே நீதான் நற்புகழ் நாட்டிவிட்டே தொல்லுலகதனை நீத்தே துறக்கத்தை அடைந்தாய்' என்ற ஈழத்துப் பெரும்புலவர் ம.பார்வதி நாதசிவத்தின் கவிவரிகள் காட்டி நிற்கின்றன.



சென்னையில் நடைபெற்ற இலக்கிய விழா ஒன்றில் பாவேந்தர் பாரதிதாஸனின் முதல் சீடரான உவமைக் கவிஞர் சுரதாசிலோன் விஜயேந்திரனுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# பொதுப் பணிகளில் முன்னின்றவர்



மறைந்த கே.கே.வி குலரததினம் அவர்கள முன்னாள் காரைநகர் கிராமசபைத் தலைவரும் 1946 ஆம் ஆண்டு திருகோணமலை - மூதூர் மோட்டார் இயந்திர படகுச் சேவையை முதன் முதலாக ஆரம்பித்தவருமான கே.கே.விசுவலிங்கம், திருமதி விசுவலிங்கம் ஆகியோரின் மைத்துனனும் ஆவார். யாழ்.ஆஸ்பத்திரி வீதி, லிங்கம் ஸ்டோர்ஸ் உரிமையாளருமான இவர் யாழ்ப்பாண வர்த்தகசங்க முன்னாள் தலைவரும செஞ்சிலுவைச் சங்க உபதலைவருமாவார்.

இன்றைய காலகட்டத்தில் குடும்ப ஒற்றுமை மிக்க வாழ்க்கை தமிழ் தேசிய இனத்திற்கு மிகவும் முக்கியமானதும் அவசியமானதுமாகும். ஏனென்றால் தமிழ்த் தேசிய இனம் தமககுள் வித்தியாசங்கள் வேற்றுமைகள் ஏற்பட்டாலும் தமிழ் தேசிய இனத்தை அடக்கி ஒடுக்க எத்தனிப்பவர்களை ஒற்றுமையாக ஒன்றுசேர்ந்து தங்கள் உரிமையை பாதுகாக்கவேண்டியது முககியமானது.

## நீத்தார் நயப்புரை

குடும்பத்தினர் 1931 ஆம் ஆண்டு தொடக்கம் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களையும் அதன்பின் அவர் ஸ்தாபித்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியையும் தொடர்நது அரசியல் ரீதியாக பகிரங்கமாக ஆதரித்து வருகிறார்கள்.

அன்னார் இறக்கும்பொழுது 70 வயதைத் தாண்டியபொழுதும் பல வருடங்களாகப் பொது ஸ்தாபனங்களில் ஈடுபாடுடையவராக இறுதி வரை செயலாற்றி இறப்பதற்கு இருபது நாட்களுக்கு முன் யாழ்ப்பாணச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பாக கொழும்பிற்கும் வேறு இடங்களுக்கும் சென்று பொதுவேலைகளில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் தனது தந்தையார்போல் தனது வாழ்கையில் கூடுதலான நேரத்தில் பொது வேலைகளிலும் பொது ஸ்தாபனங்களிலும் ஈடுபட்டு செயல்பட்டார் என்பதை பலர் அறிவார்கள். அவரது சேவைக்காக அன்னாரின் இறுதிக்கிரியை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சமயம் பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்த பலர் இறுதி அஞ்சலியைச் செலுத்தி இரங்கல் உரைகளை ஆற்றியிருக்கிறார்கள்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவர காலத்தில் மேலே கூறிய திருகோணமலை - மூதூர் மோட்டார் இயந்திர படகுச் சேவைக்கு பொறுப்பாகவிருந்து பலவிதமான எதிர்ப்பு சக்திகளை எதிர்த்து செயல்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்னும் இன்றைய கால கட்டத்திலும் தொடர்ந்து அப்படகுச்சேவை செயல் பட்டுக்கொண்டிருக்கிறது.

ஒருவர் புகழைத் தேடலாம், செல்வத்தை தேடலாம், வீரத்தைத் தேடலாம். ஆனால், தனது உடம்பிலிருந்து ஆன்மா அமைதியாக பிரிந்து செல்வதைத் தேடுவது இலகுவான காரியமல்ல. அன்னார் 70 வயதடைந்துள்ள நிலையில் கடுமையான நோய்க்குள்ளாகியிருந்தும் நல்லூர் கந்தனை இறுதியாக தரிசித்த பின் மயக்கமடைந்த நிலையில் அவரின் ஆன்மா பிரிந்தது. இது அவர் செய்த புண்ணியமே ஆகும். அன்னார் 70 வயதடைந்தும் கூட ஓர் இளைஞர் போல் இன்றைய காலகட்டத்தில் பொது ஸ்தாபனங்களிலும், பொது வேலைகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர். அந்தவகையில் அவரை இழக்க நேர்ந்தமை எமது துரதிஷ்டமே.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய ஆண்டவன் துணைபுரிவாராக. **- க.மு.தர்மராசா**

# நூல் வரிசை



நூல் : **வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் பொன்விழா மலர்.**

வெளியீடு : **சைவசமய அபிவிருத்திக்கழகம்**

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் 50 ஆவது ஆண்டை முன்னிட்டு பொன்விழா மலர் ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஆலயத்தின் முகப்புத்தோற்றம், கழகத்தின் அலுவலகப் பணிமனையின் முகப்புத் தோற்றம் ஆகியவற்றின் வெளித்தோற்றத்துடன் காணப்படும் இப்பொன்விழா மலர் சைவசமய மக்கள் பயனடையும் வகையில் பல கட்டுரைகளைத் தாங்கிய வண்ணம் வெளிவந்துள்ளது.

இம்மலரில் ஆலயமுகப்புத்தோற்றம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், கழக நிர்வாக சபையினர், கழகச் செயற்பாடுகள் பற்றிய பல வர்ணப்புகைப்படங்களுடன் அச்சிடப்பட்டுள்ளன.

இம்மலரில் பேராசிரியர். இ.குமாரவடிவேல் 'கல்வியின் நோக்கம்' என்ற கட்டுரை சிறப்பம்சமாகவுள்ளது. இன்றைய கல்விநிலை பற்றியும், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றியும் தமிழ்ச்சமூகம் இவற்றை வாசித்து அறிந்து பயனடையவேண்டும் என்ற உயரிய சிந்தனையில் இக்கட்டுரைவரையப்பட்டுள்ளது. மேலும், ஆறுமுகநாவலரின் நான்காம் பலாபாடத்தின் 'தருமம்' என்ற கட்டுரையும், ஆறுமுகநாவலரின் 'தின நியமம்', சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களின் 'விவாகவியல்' கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு எழுதிய 'சைவசமய வாழ்வு' முன்னாள் பிரதி அதிபர் திரு.க.சிவராமலிங்கம் எழுதிய 'அறிவியலும், அருளியலும்' ஆகிய கட்டுரைகளையும் இம்மலர் தனதாக்கி வெளிவந்துள்ளது.

**- அன்பன்**



நூல் : **சிரிக்கும் பூக்கள்**

ஆசிரியர் : **நெடுந்தீவு லக்ஸ்மன்**

வெளியீடு : **சவுத் இந்தியா பப்ளிகேசன்ஸ் சென்னை.**

'ஆங்கில கான்வென்ட்' இல் படிக்கும் குழந்தைகளுக்குச் சொல்லித்தரும் பாடல் ஒன்று 'Rain Rain go away' 'மழையே மழையே போய்விடு' எவ்வளவு அதிர்ச்சி தரும் பாடல். மழையை விரும்பி வரவேற்கும் நிலையில் உள்ள நாட்டில் வரும மழையை 'போ போ' என்று மழலையைக் கொண்டு பாடவைக்கும் பாடல்.

இவ் அவலநிலையை உணர்ந்த கவிஞர் நாகேந்திர லக்ஸ்மன் அவர்கள் 'மழை' என்ற தலைப்பில்

மழையே நீயும் பெய்வாயே
மரங்கள் செழிக்க செய்வாயே!
குளங்கள் தம்மை நிறைப்பாயே
கொடிய வறட்சி ஒழிப்பாயே!
............
பூமி குளிரச் செய்வாயே!

என்று அழகாகப் பாடுகிறார் கவிஞர். பாட்டின் பொருளில் 'மண்ணின் தேவை' தெரிகிறது. குழந்தை பாடும் ராக 'பண்'ணும் தெரிகிறது. கவிஞரின் மேதமைத் தனமும் தெரிகிறது.

'சுதந்திரக்கவி' பாரதியார் 'ஓடிவிளையாடு பாப்பா' என்ற எளிய இலக்கியத்தின் மூலம் அழுத்தமாகப் பாடியுள்ளா. ஆயிரம் பாடல்களில் காணக்கிடக்கும் ஆயிரம் உணர்வுகளை விஞ்சிய உணர்வு - நெஞ்சினிக்கும் தாய்மை பரிவுணர்வை வழங்கியபாடல் ஒரே பாடல் - பாப்பா பாடல்.

ஒரு பாடலுக்கு நம் சிந்தையை அள்ளும் திறன் இருக்குமானால் - இக்கவிஞரின் அனைத்துப்பாடல்களும் மழலையின் சிந்தையில் படரும் திறன் இருக்கிறது.

தன் அரிய படைப்பால் தமிழ் சமுதாயத்தின் இளம் தளிர்களுக்கு எளிய பாடல் நீர் ஊற்றி பரிவான தமிழ் சமுதாயத்தை உருவாக்கும் கவிஞர் தமிழ் போல் ஊழி கடந்து வாழ்க! வாழ்க! எனப் போற்றுவோம் வாழிய கவிஞர்! வெல்க அவர் தமிழ் தொண்டு!

**- ஆ.சந்திரசேகர்,**
*அவை முனைவர்*
*அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுச்செயலாளர்.*



நூல் : **மடு அன்னை பிள்ளைத்தமிழ்**

ஆசிரியர் : **மு.சிங்கராயர்**

வெளியீடு : **தமிழ்மதி - யாழ்ப்பாணம்**

கவிஞர் முடியப்பு சிங்கராயரின் நான்காவது கவிதைப் படையலாக வன்னிக்காட்டில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் மடு அன்னை மீது பாடிய பிள்ளைத்தமிழ் வெளிவந்துள்ளது. கத்தோலிக்கர் மட்டுமல்ல மற்றைய மறை சார்ந்தவர்களும் ஏற்றிப்போற்றிடும் மரியன்னைக்கு எழுதிய இக்கவிதை நூல் அனைவருக்கும் உரித்தான சொத்தாகக் கருதமுடியும்.

சிற்ப, ஓவியக்கலைகள் மரியாவை தமிழ்ப் பெண்ணாகச் சேலையுடன், பூவோடும் பொட்டோடும் அன்னியத்தை அகற்றி தமிழருக்குச் சொந்தமான தாயாக சூழமைவாக்கியுள்ளது. பிள்ளைத்தமிழ் சிற்றிலக்கியத்தின் தமிழ் மானிடத்துள் புகுந்து மரியன்னையை அல்லது மணமயப்படுத்தப்பட்ட மடு மாதாவை ஒரு தமிழ்க் குழந்தையாக தமிழ் சூழமைவில் இறையிலாக்கம் செய்துள்ளார் ஆசிரியர். அன்னை, தாய், மாதாவாக பார்த்து பழக்கப்பட்டவர்க்கு குழந்தையாகப் பார்க்கும் ஓர் அரிய வாய்ப்பு! 'தமிழ்க் குழந்தையின் செங்கீரை, சப்பாணி, முத்தம், அம்புலி, நீராடல் போன்ற பத்துப் பருவங்களை அதற்குரிய கால வரையறைகளோடு மரபுவழி பிறழாமல் மடுத்திருப்பதியின் இயற்கை வனத்தில் மடு அன்னைக் குழந்தையை தமிழில் தவழவிட்டுள்ளார்! தமிழ்ப் பண்பாடும் கிறிஸ்தவ நெறிகளும் முட்டி மோதி இணைந்து சங்கமம் ஆகும் பொழுது அது ஒன்றையொன்று வளம் கொள்ளும், நிறைவு செய்யும். இது ஆசிரியரின் சிந்தனைத் தெளிவு!

மடுத்திருப்பதி அமைந்திருக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு இராயப்பு யோசப் அவர்களின் ஆசியுரையுடன், அருள்பணி சூ.மங்களராசா, அருள்பணி ஞா.பிலேந்திரன் பண்டிதர் சி.கார்த்திகேசு அவர்களின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றுள்ளது.

"சிங்கராயர் அவர்களின் கவித்துவம் ஓசையும் இனிமையும் வாய்ந்த சொற்களின் ஆட்சியாலும் வருணனைத் திறத்தாலும் பக்திக்கனிவாலும் படிப்போர் உள்ளங்களை மிகுதியும் ஈர்க்கும் என்பதை நான்படித்துப் பெற்ற அனுபவத்தால் சாட்சி பகர்கிறேன் வெறும் புகழ்ச்சி இல்லை" என்கிறார் இந்நூலிற்கு சிறப்புப் பாயிரம் வழங்கிய சாகித்தியரத்னம் கலாநிதி க.சொக்கலிங்கம் அவர்கள்.

**- அருள்பணி அ.பி.ஜெயசேகரம்**



நூல் : **கிரேக்கர்களின் கைவண்ணம்**

ஆசிரியர் : **திரு.து.துசியந்தன்**

வெளியீடு : **INSTITUTE OF ART TRAINING கந்தர் மடம**

வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்ற கூற்றுக்கமைய தேடி வாசித்து கற்பதன் மூலமே சிறந்த அறிவைப் பெறமுடியும். ஆனாலும் எம் போன்ற (சித்திரத்துறை சார்ந்த) மாணவர்கள் தேடிக்கற்பதற்கு உகந்த நூல்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. அதுவும் ஐரோப்பிய கலை பற்றிய தகவல்கள் எம் மொழியில் அரிதிலும் அரிதாக உள்ளது. இந்தக் குறைபாட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் வகையில் ஆசிரியர் து.துசியந்தன் எழுதிய கிரேக்கர்களின் கைவண்ணம் என்ற நூல் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைகின்றது. இந்த நூலிலேகிரேக்கர்களின் வரலாற்றை அறிவதோடு அவர்களின் கலை வெளிப்பாடுகள் பற்றிய முழுமையான அறிவினையும் பெறமுடிகின்றது. விளக்கப் படங்களோடு காணப்படுவதால் கற்பதற்கும் இலகுவாக அமைகின்றது.

**- இ.செந்தூரா**

# 26,929 பேர் வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்ய விண்ணப்பம்

வாக்காளர் இடாப்பில் பெயர்களைப் பதிவுசெய்வதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து 26 ஆயிரத்து 929 பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர். 18 வயதிற்கு மேற்பட்டவர்களை வாக்காளர் பட்டியலில் பதிவுசெய்யும் பணி கடநத ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதிமுதல் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி வரை யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கென யாழ். மாவட்டத்திலுள்ள 10 தேர்தல் தொகுதிகளுக்கும் 41 ஆயிரத்து 125 விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் பெயர்களைப் புதிதாக பதிவுசெய்வதற்கென 26 ஆயிரத்து 929 விண்ணப்பங்களும், வாக்காளர் பட்டியலில் தமது பெயர்களை நீக்கவென 3 ஆயிரத்து 82 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன.

இவற்றில் ஊர்காவற்றுறையில் பதிவுசெய்வதற்க ஆயிரத்து 750 விண்ணப்பங்களும், நீக்குவதற்கு 910 விண்ணப்பங்களும் வட்டுக்கோட்டையில் 2 ஆயிரத்து 300 விண்ணப்பங்களும், நீக்குவதற்கு ஆயிரத்து 210 விண்ணப்பங்களும் -


காங்கேசன்துறையில் பதிவுசெய்வதற்கு 2 ஆயிரத்து 953 விண்ணப்பங்களும், நீக்குவதற்கு 529 விண்ணப்பங்களும் - மானிப்பாயில் இருந்து 3 ஆயிரத்து 400 விண்ணப்பங்களும் நீக்குவதற்கு 700 விண்ணப்பங்களும் - கோப்பாயிலிருந்து பதிவுசெய்வதற்கு 2 ஆயிரத்து 600 விண்ணபங்களும், நீக்குவதற்கு 650 விண்ணப்பங்களும் உடுப்பிட்டியில் இருந்து பதிவுசெய்வதற்கு ஆயிரதது 906 விண்ணப்பங்களும்- பருத்தித்துறையில் இருந்து பதிவு செய்வதற்கு 2 ஆயிரத்து 31 விண்ணப்பங்களும் நீக்குவதற்கு 634 விண்ணப்பங்களும், சாவகச்சேரியிலிருந்து பதிவுசெய்வதற்கு 3 ஆயிரத்து 500 விண்ணப்பங்களும் -

நல்லூரில் இருந்து பதிவுசெய்வதற்கு 3 ஆயிரம் விண்ணப்பங்களும் நீக்குவதற்கு ஆயிரம் விண்ணப்பங்களும், யாழ்ப்பாணத்தில் இருந்து பதிவுசெய்வதற்கு 3 ஆயிரத்து 489 விண்ணப்பங்களும் நீக்குவதற்கு 360 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பதிவுசெய்வதற்கு 26 ஆயிரத்து 926 விண்ணப்பங்களும், நீக்குவதற்கு 7 ஆயிரத்து 543 விண்ணப்பங்களும் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

(10-5)

## 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




குடமியன் வரணியைச் சேர்ந்த **பாஸ்கரலிங்கம் - கோகிலா** தம்பதிகளின் செல்வப் புதல்வி **அலானா** தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று (16.10.2004) சனிக்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அலானாக்குட்டியை அவரது அன்பு அப்பா, அம்மா, அம்மப்பாமார், அம்மம்மாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், பூட்டிமார், மாமாமார், பெரியப்பாமார், சித்தப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், குடும்ப நண்பர்கள் அனைவரும் வரணி சிட்டிபுரம் கண்ணகை அம்மன் அருள் பெற்று சீரும் சிறப்புமாக பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென உளமார வாழ்த்துகின்றனர்.

கோகிலா தொலைத் தொடர்பகம்,
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்

(37608)

**அம்மப்பா - ம.சின்னராசா**


**OBTAIN A DEGREE**
**to make a career in Australia**
ஆஸ்திரேலியாவில் கர்கைநெறிகளை மேற்கொள்ள
**பட்டம் பெறுங்கள்**

Obtain a Bachelor or a Postgraduate degree from a " TOP" University, if you are looking for a career in Australia. The University you graduate from is all important to future career prospects in Australia.

**We now represent 10 Australian Universities (of which 5 are Go8) in 5 States & ACT**

- University of Newcastle
- University of South Australia
- Flinders University of South Australia
- Edith Cowan University
- Swinburne University
- * University of Melbourne
- * University of Sydney
- * University of Adelaide
- * Australian National University, Canberra
- * University of Queensland

* "Go8" Universities

Apply now for Feb 2005 intake

edlocate
EDUCATION AUSTRALIA

Contact Representative
Mr. S. Pathmanathan
"Eraham" Potpathy Road, Kokuvil.
Tel : 0777 252204
E-mail : sopa1404@yahoo.co.uk


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மண்ணில் | வின்ணில் |
|---|---|
| 1941 - 10 - 22 | 2004 - 09 - 16 |



நயினை அமரர் **மருதடியான் பத்மநாதன்**

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், ரெலிகொம் - வவுனியா)

கடந்த 16.09.2004 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவுத்துயரில் நேரடியாகக் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு அனுதாபச்செய்திகள் மூலம் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து எமக்கு ஆறுதல் அளித்தோருக்கும், நோய்வாய்ப்பட்டிருந்த போது அவருக்கு அயராது வைத்திய சிகிச்சைகளை மேற்கொண்ட வவுனியா போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த நிறுவனங்கள், சமூக அமைப்புக்களுக்கும், இறுதிக்கிரியைகள், அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் சகலவிதமாகவும் எமக்கு உதவிகள் புரிந்து எமது துயரில் பங்குகொண்ட அன்பு உள்ளங்கள் அத்தனைபேருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

*இன்று (16.10.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*

6ஆம் ஒழுங்கை,
கோயில் புதுக்குளம், வவுனியா.
T.P.: 024 2222094 (37593)(39-33-13-15)

தாய், மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

## நெஞ்சம் மறவாத 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21 ~ 11 ~ 1937 | 30 ~ 09 ~ 2000 |



அமரர் **பொ.குகதாசன்**

(பிரபல கட்டடக் கலைஞர்)

திதி: 2004.10.16

எங்கள் குடும்பத் தலைவரே! ஆருயிர் அப்பாவே!
ஆண்டுகள் ஆனது நான்கு, ஆறவில்லை எம் துயரம்
பாசத்துடன் துணை நின்ற மனையாளும்
அள்ளி அணைத்து வளர்த்திட்ட பிள்ளைகளும்
ஆசையுடன் தேர்ந்தெடுத்த மருமக்களும்- உங்கள்
அருமைப் பேரக் குழந்தைகளும் உற்ற துணையின்றி
இன்னமும் தவிக்கின்றோம் ஆறுதல் தந்திடுவீர் அப்பாவே!

*"கேமாலயம்"*
*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.* (37578)(39-33-13-15)

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 - 01 - 1936 | 09 - 10 - 2002 |



திருமதி
**குமாரசாமி சிவபாக்கியம்**

ஆண்டுகள் இரண்டும் ஆனதுவோ
அம்மா உன் முகம் பார்த்து?
அன்புக்கு இலக்கணம் நீ தந்தாய்
ஆறுதலுக்கு வழியேதும் தெரியவில்லை
நாள்கள் கடந்து வருடங்கள் நிறைந்தன
யுகங்கள் கழிந்தாலும் இவ்வுலகினிலே
உன் நினைவினிலே என்றும் நாம் வாழ்வோம்!
எங்கள் அன்புத் தெய்வமே! தாயே!!

குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(37468)(39-33-13-15)

*என்றும் நினைவில் வாடும்:*
கணவர்: த.குமாரசாமி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# விடாமுயற்சியும், சகிப்புத்தன்மையுமே 'சித்தாலேப' நிறுவனத்தின் வளர்ச்சி

## அதிபர் ஹெட்டிகொட செவ்வி

கடந்த 75 வருடங்களுக்கு முன்பு சிறு அளவில், கடன்வாங்கி மூலிகைப் பொருளை உற்பத்தி செய்து, பெட்டியில் வைத்து தலையில் சுமந்து வியாபாரம் செய்தேன். இன்று 200 வாகனங்களுடன். 2,800 தொழிலாளர்களுடன் பரந்துபட்டு வளர்ந்துள்ளேன். எனது விடாமுயற்சியும் சகிப்புத்தன்மையுமே இதற்குக் காரணம்.

காலப்போக்கில் சிறிய கார் ஒன்றை வாங்கினேன். அதன் பின் வான் ஒன்றை வாங்கினேன். படிப்படியாக காலடி எடுத்துவைத்தேன்.

இன்று 200 வாகனங்கள் 2,800 தொழிலாளர்கள். பெரும் நிலப்பரப்பில் பாரிய தொழிற்சாலை. எனது வியர்வை சிந்திய உழைப்பால்

களுக்கு இலவச காப்புறுதி வழங்கியுள்ளேன். அவர்களுக்கு 10 ரூபாவுக்கு உணவு வழங்குகின்றோம். அவர்களில் 15 முதல் 20 வருடம் பணியாற்றிய நால்வரைத் தெரிவுசெய்து இயக்குநர் சபையில் இடம் அளித்துள்ளேன். தொழிற்சாலை நிர்வாகம் முழுமையாக அவர்கள் பொறுப்பிலேயே இருக்கும்.

சர்வதேச விருதுகள் பலவற்றைப் பெற்ற எமது நிறுவன உற்பத்திகளின் விற்பனையை

யில் 65ஆம் ஆண்டு வல்வெட்டித்துறைக்கு வந்தேன். அச்சமயம் சுத்தமான அபின் அங்கே தான் பெறமுடியும். அது எமது உற்பத்திப் பொருள்களுக்கு முக்கியம் தேவையான மூலப்பொருள் - என்று அந்தக்கால நினைவுகளை மீட்டார்.

எமது நிறுவன உற்பத்தி பொருள்களில் 32 பொருள்கள் யாழ்ப்பாணச் சந்தையில் உள்ளன. அவற்றுக்கு நல்ல வரவேற்பு

யாழ்ப்பாணத்துக்கு இவ்வார ஆரம்பத்தில் வருகை தந்த சித்தாலேப தயாரிப்பு நிறுவனத்தின் தலைவர் 'தேசபந்து' விக்ரர் ஹெட்டிகொட மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரம்பரிய ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு 92மூலிகைப் பொருள்களைத தயாரித்து மக்களைச் சுகதேகிகளாக வைத்திருக்க விரும்பும் நிறுவனம் ஹெட்டிக்கொட நிறுவனம். அந்நிறுவனத்தின் தலைவர் விக்ரர் ஹெட்டிகொட கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தார்.



கடந்த 10ஆம் திகதி யாழ்.லொயலாஸ் மண்டபத்தில் ஹெட்டிகொட இன்டஸ்றீஸ் நிறுவனம் யாழ்.வர்த்தகர்களுக்கு 'வியாபாரத்தின் முன்னேறுவதற்குக் கடைப்பிடிக்கவேண்டிய சில முக்கிய அணுகுமுறைகள்' என்னும் தலைப்பில் நடத்திய ஒன்றுகூடலுக்கு ஹெட்டிகொட கூட்டுநிறுவனங்களின் தலைவர் தேசமான்ய கலாநிதி விக்ரர் ஹெட்டிகொடவை யாழ். வனிக்கா மெடிக்கல்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கே.என்.இராஜரட்ணம் அழைத்துவருவதையும் கலாநிதி விக்ரர் ஹெட்டிகொட, நல்லூர் கோட்ட அரசியல் துறைபொறுப்பாளர் செழியன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். இந்த ஒன்றுகூடலில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றினர்.

தமது உற்பத்திப் பொருள்களின் வர்த்தகத்தைப் பெருக்கும் நோக்குடன் வந்த அவர் வர்த்தகத்துறையில் தனது வளர்ச்சி பற்றியும் அதற்கான வழிமுறைகள் என்ன என்பன குறித்தும் யாழ். வர்த்தகர்களுக்கு விளக்கம் அளிக்கவும் முன்வந்தார்.

தமது வர்த்தகத்துறை அனுபவங்கள் குறித்து அவர் தெரிவித்ததாவது:

1934 ஆம் ஆண்டு சித்தாலேப நிறுவனத்தை முறிந்த நிலையில் எனது தந்தையார் என்னிடம் ஒப்படைத்தார். வியாபாரத்தை முன்னெடுக்க என்னிடம் பணவசதியில்லை. எனது சிறிய தாயாரிடம் 2 ஆயிரத்து 500 ரூபா கடன பெற்றேன். அக்கடன் மூலம் சிறிய அள




வில் உற்பத்தியை மேற்கொண்டு பொருளை உற்பத்தி செய்து, தலையில் சுமந்து சென்று கடைகளுக்கு வழங்கினேன். எப்படியாயினும் ஒரு நாளைக்கு 8அல்லது 9 ரூபாவை உழைப்பேன். இந்த வருமானம் எனது இருப்பிட, உணவுத் தேவைகளுக்குப் போதாமல் இருந்தது.

ஆதலால், வியாபாரம் செய்யும் கடை ஒன்றின் முன் வாசலில் படுத்தேன். சாப்பாட்டைக குறைத்தேன். ஒருவாறு கையில் பணம் சேர்ந்தது. மனச்சோர்வோ, விடாமுயற்சியோ இன்றித் தொடர்ந்து வியாபாரத்தை முன்னெடுத்தேன்.

எட்டிய வெற்றி.

எனது தொழிற்சாலையில் மூலிகை களில இருந்து 92 பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மக்களின் சகல நோய்களுக்கும் நிவாரணிகளாகவே அவை அமைந்துள்ளன.

தொழிற்சாலையில் வேலை செய்பவர்

ஊக்குவிக்க இந்தியாவின், சென்னையில் நிலையம் ஒன்றை அமைத்துள்ளோம். அத்துடன் அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, இததாலி, சுவீடன், கனடா, ஆஸ்திரேலியா, ரஷ்யா உட்பட 22 நாடுகளுக்கு எமது பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன - என்றார் அவர்.

யாழ்ப்பாண நிலைமை குறித்துக் கூறுகை

உண்டு, யுத்தகாலத்துக்கு முன்பு இருந்த கிராககியைவிட இப்போது அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாண மக்கள் எமது பொருள்களை விரும்பி வாங்கிப் பயன் அடைகிறார்கள் - என்று கூறி முடித்தார் அவர்.

(ஐ-3)

**இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனமான, யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிட்டெட் யாழ். மாவட்டத்தில் 43ஆவது கிளையை நிறுவி இரண்டரை வருடங்கள் பூர்த்தியாகின்றது. யாழ். மாவட்ட மக்களுக்கு காப்புறுதிச் சேவையை வழங்கி வருகின்ற இந்நிறுவனம் மக்களுக்கு உரிய முறையில் காப்புறுதிச் சேவை கிடைக்க வேண்டும் என்பதை ஒரே நோக்காகக் கொண்டு, ஆயுள் காப்புறுதி, பொதுக்காப்புறுதி என இருபிரிவாக வகைப்படுத்தி ஒவ்வொரு பிரதேசரீதியாக காப்புறுதி அதிகாரிகளை நியமித்து அவர்களூடாக இலகுவான காப்புறுதிச் சேவையை வழங்கிவருகின்றது.**

**இந்த நிறுவனத்தில் ஆயுள் காப்புறுதி மேற்கொண்டிருந்த குடும்பத் தலைவரின் இழப்பை அடுத்து அவரது மனைவிக்கு அதி உச்ச இழப்பீட்டுத் தொகைக்குரிய 936,000 ரூபா பெறுமதிக்குரிய காசேரலை அண்மையில் வழங்கப்பட்டது. அதனையே படத்தில் காண்கிறீர்கள்.**



**யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதிக் கம்பனியின் யாழ்ப்பாணக்கிளையின் முகாமையாளர் சி.என். மதிவதனன் இழப்பீட்டுக்குரிய அதி உச்ச காசோலையை இறந்தவரின் மனைவிடம் கையளிப்பதையும், அருகில் யூனியன் அஷ்யூரன்ஸ் ஊழியர்களில் ஒரு பகுதி யினரையும் காணலாம்.**

**(ஐ-3)**

# மிருகபலியை ஆதரிப்போர் வீண் பிழவாதம் செய்வது தகுமா?

சைவக் கோயில்களில் நடைபெறும் வேள்வி பற்றிய வாதப்பிரதிவாதங்கள் உதயனில் பிரசுரமாகியிருந்தன, வேள்வி செய்வது சரி எனவும், பிழை எனவும், அவரவர் விருப்பம் எனவும் பல கோணங்களில் உதயனில் கருத்துக்கள் பிரசுரமாகியிருந்தன. இது தொடர்பாக எனது கருத்தையும் 'உதயன்' வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆதிமனிதன் விலங்குகளை வேட்டையாடியும், காய்கனிகளை உண்டும் வாழ்ந்து வந்தான். பின்னர் தவறுதலாக நெருப்பில் வீழ்ந்த இறைச்சி சுவையாயிருப்பதைக்கண்ட மனிதன் நாளடைவில் உணவை வேக வைத்து உண்ணப்பழகிக் கொண்டான். இது மனிதன் அல்லது மனித நாகரிகத்தின் தோற்றம் பற்றி விஞ்ஞானம் கூறுவது.

ஆதிசங்கரரின் காலப்பகுதியில் 'கபாலிகர்கள்' என்ற ஓர் இனத்தினர் வட இந்தியாவில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் பூரமாமிச பட்சாணிகள். இவர்கள் ஆதிசங்கரரைக் கூடக்கொன்று சாப்பிட முயற்சித்தார்கள்.

நவீன விஞ்ஞானம் தாவர உணவே சிறந்தது எனக் கூறுகிறது. தாவர உணவுகளில் மாமிச உணவைவிட போஷாக்கு அதிகம் காணப்படுவதாகவும் நவீன விஞ்ஞானம் கூறுகிறது. அத்துடன் மரக்கறி உணவுகளை உட்கொள்வோரை நோய்கள் அணுகுவதில்லையெனவும் மேலைத்தேய விஞ்ஞானம் கூறுகிறது. அண்மையில் கூட யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒருவர் மரக்கறி உணவு சாப்பிடுவதிலுள்ள நன்மைகளைப் பற்றி உதயனில் கட்டுரையொன்று வரைந்திருந்தார்.

லண்டனில் மரக்கறி உணவு சாப்பிடுவோர் கழகம் (Vegetarian Society) என்ற பெயரில் மரக்கறி உணவு சாப்பிடுவோர் ஒன்று சேர்ந்து சங்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இந்தச் சங்கத்தின் கிளைகள் அமெரிக்கா உட்பட பல நாடுகளில் உள்ளன. இவர்கள் 'Vegetarian'என்ற பெயரில் மாதாந்தச் சஞ்சிகையொன்றையும் வெளியிட்டு வருகின்றனர். இச்சஞ்சிகையில் மரக்கறி உணவின் சிறப்பைப் பற்றி விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து கட்டுரைகளையும் இவர்கள் வெளியிட்டு வருகின்றனர்.




பலி அல்லது உயிர்க்கொலை என்று வரும்போது ஒவ்வோர் உயிரினமும் இறுதி மூச்சுவரை போராடி இனிப்போராட முடியாது என்ற நிலை வரும் போதுதான் தமது உயிரை விடுகின்றன. இது ஊர்வன எனப்படும் அட்டை அல்லது நத்தை தொடக்கம் மனிதன் வரைக்கும் உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் பொருந்தும்.

விஞ்ஞானம் வளர்ச்சியடையத் தொடங்கிய போது மரக்கறி உணவின் நன்மையையும் மாமிச உணவின் தீமையையும் பற்றி அறிந்து கொண்ட முன்னோர்கள் மாமிசம் புசிக்கும் பழக்கத்தை மக்களிடமிருந்து முற்றாக அகற்ற முடியாது என்பதால் வருடத்தில் ஒரு முறை ஆண்டவனுக்குப் படைத்து விட்டுச் சாப்பிடுங்கள் எனக்கூறியிருக்கலாமென்றும் கருதலாமல்லவா?

விஞ்ஞானம் எங்கோ சென்று கொண்டிருக்கிறது. நாமும் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப எமது வாழ்க்கையை மாற்றியமைத்துச் செயல்பட்டு வருகிறோம். ஐயர் வாயால் மந்திரம் சொல்லி கிரியைகளை நடத்துவது இந்துமத மரபு. ஆனால், ஒலிபெருக்கி வந்தவுடன் ஒலிபெருக்கியில் மந்திரம் ஒலிபரப்பாகிறது. தீவர்த்தி வெளிச்சத்தில் சுவாமி வீதியுலா வருவது அந்தக்கால வழக்கம். 500, 1000 வாற் மேர்க்குறி பல்புகளுடன் சுவாமி வீதி வலம் வருவது இந்தக் காலவழக்கம். தவில், நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரியுடன் சங்கு, சேமக்கலம் ஒலிக்க சுவாமி வீதியுலா வருவது அந்தக காலம்.

**ந.பரமேஸ்வரன்**

மின்சார மேளத்துடன் சுவாமி வீதியுலா வருவது இந்தக் காலம்.

இவ்வாறு கோயிலில், கிரியைகளில், வழிபாட்டு முறைகளில் எல்லாம் காலத்திற்கேற்ப மாற்றங்களைச் செய்துவரும் நாம், வேள்வி என்ற ஒரு விடயத்தில் மட்டும் விடாப்பிடியாக பலியிடத்தான் வேண்டும் என்று ஏன் வீண் பிடிவாதம் பிடிக்கவேண்டும். அப்படியானால் கபாலிகம் என்பதும் இந்து மதத்தின் ஒரு பிரிவு தானே? வேள்வி நடத்தியே தீரவேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்போர் நரபலி கொடுக்கத்தான் வேண்டும் என்றும் வலியுறுத்துவார்களா? பெரும்பாலும் வைரவர் கோயில்களிலேயே வேள்வி நடைபெறுகிறது. வைரவரின் துணைவி காளி எனக்கூறப்படுகிறது. கபாலிகர்களின் குலதெய்வமும் காளியே. வைரவருக்கு வேள்வி நடத்துவோர் ஏன் காளியைக் கைவிட்டுவிட்டனர்.

★

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல காப்புறுதி நிறுவனம் தனது சேவையை விரிவுபடுத்தும் முகமாக நெல்லியடியில் புதிய கிளை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இதன் பொருட்டு பிரதேசப் பிரதிநிதிகளை உள்வாங்க உள்ளது. ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

கல்வித் தகைமை: க.பொ.த.சாதாரணம் சித்தியடைந்திருத்தல்
வயது: 20 இற்கு மேற்பட்ட இருபாலாரும்
சம்பளம்: (தரகுப் பணம்) ரூபா 3000 - 50000
விண்ணப்பிக்கப்பட வேண்டிய கடைசித் திகதி: 22.10.2004

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
விள.இல. 2408
மே/பா உதயன்

(37613)(39-18-19-26)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



செல்வப் புதல்வி
**கஜானா**

திரு.திருமதி
கண்ணன் - உதயராணி
தம்பதிகளின்
செல்வப் புதல்வி
கஜானா
தனது முதலாவது பிறந்த நாளை இன்று (16.10.2004) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டி மற்றும் மாமன்மாரான சந்திரன், லண்டனிலிருக்கும் ரமேஸ், சூட்டி, இந்திரன், பிரியமான வேணிச்சித்தி, ராஜ் சித்தப்பா, கனடாவில் இருக்கும் சுரேஸ், றெஜினா, டோகாவில் இருக்கும் சிவநாதன் சித்தப்பா, நவிண்டிலில் வசிக்கும் சிவராசாப் பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமாரான செல்வநாதன், கமல், பவுண், அத்தைமாரான நஞ்சினி, லீலா, மங்களம், மாலதி, சிவகுமார் மாமா, ரூபி மாமா, அக்காமாரான திருத்திகா, திபர்னா, மச்சான்மாரான சிவாகர், ஜதுர்சன் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கஜானா அவர்களைத் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் அருள் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

ரெட் றோஸ் பாம்,
தொண்டைமானாறு.

திரு.திருமதி கண்ணன் - உதயராணி.

(37600) (24-18-19-26)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



பருத்தித்துறை, வல்லிபுரம், புலோலியைச் சேர்ந்த
திருச்செல்வரூபன் - சாந்தகுமாரி
தம்பதிகளின்
அருந்தவப் புதல்வி
**செல்வி கஜானி**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (16.10.2004) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். செல்வ கஜானிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்திமார், மாமாமார், பூட்டன், பூட்டி மற்றும் மாவடி வல்வெட்டியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், சித்தப்பாமார், அத்தைமார் மற்றும் மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், அக்காமார், அண்ணன்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் அருள்பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என்று மனதார வாழ்த்துகின்றார்கள்.

"வல்லிபுரம்"
புலோலி தெற்கு,
புலோலி

- அன்பு மாமா சந்திரகுமார்.

(37447)(38-18-19-26)



## Sri Vallipura Alvaar Thevasthana
## Universal Education Center

**Manthikai**
**T.P.No.: 021 - 2263860**

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office | 16-10-2004 | 11.00 |
| Diploma in Desk Top Publishing | 16-10-2004 | 09.00 |
| Visual Basic | 20-10-2004 | 09.00 |
| Diploma in English | 18-10-2004 | 04.00 |

### Vacancy

எமது கனனி நிறுவனத்தில் கனனி விரிவுரையாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரக்கோவை, ஏனைய கல்வி ஆவணங்களுடன் ஞாயிற்றுக்கிழமை (17-10-2004) பி.ப. 4.00 மணிக்கு நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- நிர்வாகி.

(37620) (26-18-19)


## விருத்தப்பா ஓதல் போட்டி முடிவுகள்

வலி.தெற்கு, ஒக்.16

சகலகலாவல்லிமாலை விருத்தப்பா ஓதல் போட்டிகள் உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே கடந்தவார இறுதியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன.

ஆண், பெண் இருபாலாரிடையேயும் கீழ்ப் பிரிவு, மேற்பிரிவு என்ற இருநிலைகளில் போட்டிகள் நடைபெற்றன.

மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

கீழ்ப்பிரிவு ஆண்கள்: முதலாம் இடம் - ப.சாயிராம் (இணுவில் இந்துக்கல்லூரி, இரண்டாம் இடம் - சோ.யதுகுலம் (இணுவில் மத்திய கல்லூரி, மூன்றாம் இடம் - வி.கோவேந்தன் (இணுவில் மத்திய கல்லூரி).

கீழ்ப்பிரிவு பெண்கள்: முதலாம் இடம் - க.கிரிசா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), இரண்டாம் இடம் - க.அருள்மதி (உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, மூன்றாம் இடம் - ஸ்ரீ.வள்ளி (இணுவில் இந்துக்கல்லூரி).

மேற்பிரிவு ஆண்கள்: முதலாம் இடம் - கு.நிர்மலன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), இரண்டாம் இடம் - சி.சிவதர்சன் (இணுவில் இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம் - எஸ்.புவீஸ்வரன் (இணுவில் இந்துக் கல்லூரி),.

மேற்பிரிவு பெண்கள்: முதலாம் இடம் - கோ.ஹம்சத்வனி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), இரண்டாம் இடம் - ஸ்ரீ.சுயாத்தா (இராமநாதன் கலலூரி) மூன்றாம் இடம் - சி.கலிஸ்ரா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி) (10-152)

## யன்னல் கம்பிகளை உடைத்துத் திருட்டு!

வலி.வடக்கு, ஒக்.16

வீட்டின் யன்னல் கம்பிகளை அலவாங்கு கொண்டு உடைத்த திருடர்கள் சுமார் நான்கு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நகைகள் மற்றும் பணத்தைத் திருடிச்சென்றுள்ளனர்.

கொக்குவில் கிழக்கு, பிரம்படியில் உள்ள ச.சுரேஷ் என்பவரின் வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

அயல் வீட்டினுள் திருட முனைந்த திருடர்கள் அங்கு திருட்டு முயற்சி பயனளிக்காத நிலையில் அவ் வீட்டில் இருந்த அலவாங்கை எடுத்து வந்து யன்னல் கம்பிகளை உடைத்தே இத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவம் குறித்துப் பொலீஸ் மற்றும் கிராம அலுவலர்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது. (10-86)

## காயமடைந்தார்

தென்மராட்சி,ஒக்.16

வீதியில் வந்த 'ஹன்டர்' வாகனத்தின் கதவு திடீரெனத் திறந்து, மோட்டார் சைக்கிளோட்டியை மோதியதில் அந்த நபர் காயமடைந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த ரீ.சரத்குமார் (வயது 26) என்பவரே காயமடைந்தார். இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். (10-117)

## மது செய்த வேலை!

கோண்டாவில்,ஒக்.16

உரும்பிராய் சந்தியில் உள்ள குளிர்பான நிலையம் ஒன்றுக்குள் புகுந்து மதுஅருந்திய நபர் ஒருவர் அங்கிருந்த கண்ணாடி அலுமாரிகளில் ஒன்றை அடித்து நொருக்கினார்.

இதனால் கண்ணாடி அலுமாரிக்குள் இருந்த தின்பண்டங்களுடன் கண்ணாடித் துகள்கள் காணப்பட்டதால் உணவுக்காக அதனை பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் ,கடந்தவாரம் இடம்பெற்றது. இதுதொடர்பாக சம்பவ இடத்திற்கு இரவு 7 மணியளவில் விரைந்த பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (10-49)


## மெக்கானிக் தேவை

T.V, RADIO, WATCH பழுது பார்த்துத் திருத்தக் கூடிய, அனுபவம் வாய்ந்த மெக்கானிக் தேவை. தொடர்புகளுக்கு:
கரன் வாச் & றேடியோ
(KARAN WATCH & RADIO)
91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-38197)

## ஆட்டோ சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் ஆட்டோ ஓடுவதற்கு அனுபவமுள்ள சாரதி தேவை.
தொடர்பு: 077 6544374.

(37552) (26)

## மலேசியாவில் உயர்கல்வி

தகைமை: O/L

தொடர்பு:
திரு.வே.அம்பிகைபாகன்
(B.A.Hons)
காங்கேயன் கலைக்கோட்டம்,
போக்காலை வீதி,
உடுப்பிட்டி.
T.P.: 077 6724350.

(37624)



## யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
## தேசியநிலை முதலிடம்



தேசியநிலை தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு 1 வாசிப்பு நிகழ்வில் முதலிடம் பெற்ற
**செல்வன் தனபாலசிங்கம் கோகுலன்** அவர்களையும்,
மாவட்ட மட்டத்தில்
பிரிவு 1 - பாவோதல் முதலாம் இடம்
து.மாலோகன்
பிரிவு 1 - கதைகூறுதல் 2ஆம் இடம்
க.வர்ணிகா
ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(C/38214)(42-18-19-26)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவதுரை - சித்திரா தம்பதியரின் புதல்வனும்
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயத்தின் மாணவனுமாகிய
**செல்வன் நயிந்தன்**
அவர்கள் 2004ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டி மகிழ்வதுடன் மேலும் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் இனிது வளர வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, சகோதரர்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

கைதடி தெற்கு,
கைதடி.

(37619)(42-18-19-26)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உடுவில் ஆர்க் (Ark) வீதியைச் சேர்ந்த
சிவநாதன் - சரஸ்வதி தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வனும்
யா/இராமநாதன் கல்லூரி மாணவனுமாகிய
**செல்வன் காஜகன்**
2004 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 134 புள்ளிகளைப் பெற்றமைக்காக அவரையும் அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாரியப்புலம், சுன்னாகம்.

வாழ்த்துவோர்:
அன்புச் சகோதரர்கள் -
கம்சசி, கஜமுகி, ஜெனார்த்தனன்.

(37614) (26-18-19)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி வடக்கு, மண்டுவில்
(ஜே/304) பிரிவு கிராம
அலுவலராகக் கடமையாற்றி கிராம
அலுவலர் அதிசிறப்புத் தரத்திற்குத்
தெரிவுசெய்யப்பட்டுள்ள
**பொன்னையா குமாரசாமி**
அவர்களைப் பாராட்டுவதுடன் மேன்மேலும் பதவியுயர்வுகள் பெற்றுச் சிறப்புடன் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

- மண்டுவில் பிரிவு மக்கள்.

(சி-38209) (26-18-19)



## யாழ். மண்ணில் முதன்முதலாக.....
## குழந்தை சுகநல நிலையம்

### காருண்யா குழந்தை சுகநல நிலையம்
### KARUNYA CHILD HEALTH CARE CENTRE

☆ குழந்தைகளின் எல்லாவிதமான நோய்களுக்குமான வைத்திய ஆலோசனை ( Paediatric Consultation)
☆ ஒரு மாதத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கான பூரண வைத்திய பரிசோதனை (Neonatal Screening)
☆ விசேட குழந்தை சுகநல பதிவேட்டுப் பராமரிப்பு (Maintaining special child health care record)
☆ தொலைபேசி மூலமான குழந்தை வைத்திய ஆலோசனைகள் (Over the phone Consultation) (பதிவுசெய்யப்பட்ட குழந்தைகளுக்கு மட்டும்)

**குழந்தைகளைப் பதிவுசெய்தல்**

❖ ஒரு வயதிற்குட்பட்ட பிள்ளைகளைப் பதிவுசெய்யலாம்.
❖ பதிவுசெய்யப்படும் பிள்ளைகளின் பெற்றோருக்கு, பிள்ளைகளின் பராமரிப்புத் தொடர்பான அடிப்படை அறிவினை வழங்கக்கூடியதாக குறிப்பாக தாய்ப்பாலூட்டல், பிள்ளைகளுக்கான உப உணவு வழங்கல், பிள்ளைகளுக்கான தடுப்பு மருந்து கொடுத்தல், பிள்ளைகளின் மூளை விருத்தியை அதிகரிக்க செய்யப் படவேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் போன்றதும் பிள்ளைகளின் உடல், உள வளர்ச்சிகளை அவதானிப்பதற்குமான நூறு பக்கங்கள் அடங்கிய பதிவேடு (Karunya Child Health Care Record) ஒவ்வொன்று வழங்கப்படும்.
❖ ஒரு நாளில் ஐந்து பிள்ளைகளின் பதிவு மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.
❖ பதிவுசெய்யப்படும் பிள்ளைகளுக்கு முற்றுமுழுதான கவனிப்பு (Total Child Care) எம்மால் வழங்கப்படும்.

குழந்தை வைத்தியர்
Dr.C.S.Soloman
MBBS (Jaffna) DCH (Colombo)
T.P.: 021 222 3795

677, ஆஸ்பத்திரி வீதி,
(ஆஸ்பத்திரி வீதி,
ஸ்ரேசன் வீதிச் சந்தி).
யாழ்ப்பாணம்.

பார்வையிடும் நேரம்:
தினமும் பி.ப.4.30 முதல் இரவு 7.30 வரை (ஞாயிறு தவிர்ந்த)

*நல்ல வழியில் நடக்கப் பிள்ளைகளுக்குப் பழக்கு. முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிடமாட்டார்.* நீதிமொழிகள் 22:6

(37632)(34-18-19-26)

## புதுக்குடியிருப்பு முருகாணந்தாவில் ஆசிரியர்தின விழா

புதுக்குடியிருப்பு,ஒக்.16

புதுக்குடியிருப்பு வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியர் தினவிழா கடந்த 8 ஆம் திகதி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பாடசாலை வாயிலில் இருந்து பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.பேரின்பநாயகம் ஆகியோர் மலர்மாலை அணிவித்து விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

பாடசாலை மாணவி செல்வி த.நிறோசினி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் பொ.பேரின்பநாயகம் ஆசியுரை வழங்கினார்.

தொடர்ந்து பெற்றோரும், பழைய மாண வர்களும் ஆசிரியர்களுக்குப் பரிசுப்பொருள்கள் வழங்கி அவர்களைக் கெளரவித்தனர்.

(4-353-203)



கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் 2005 ஏப்ரல் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான இடம்பெயர் ஆய்வுகூட சேவை அண்மையில் வட்டக்கச்சி ம.வியில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பநாள் வைபவத்தில் கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.வைரமுத்து தலைமையுரை நிகழ்த்துவதை முதலாவது படத்தில் காணலாம். இதில் வட்டக்கச்சி ம.வி. அதிபர் சி.சந்திரராசா, கிளிநொச்சி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.அரியரத்தினம் ஆகியோரும் காணப்படுகின்றனர். இரண்டாவது படத்தில் ஆய்வுகூடச் சேவையில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினர் உள்ளனர். *(படங்கள்:வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

# கண்ணிவெடிகள் அகற்றப்படாததால் குளங்களைப் புனரமைப்பதில் தடங்கல்

## ஒதுக்கப்பட்ட நிதி திரும்பும் நிலை!

ஒட்டுசுட்டான்,ஒக்.16

மாங்குளம் பிரதேசத்திலுள்ள குளங்களைப் புனரமைப்பதற்கென நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் அப்பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படாததால் அவற்றைப் புனரமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் பாதிப்படைந்துள்ளது என்று தச்சடம்பன் கமக்கார அமைப்பினர் கவலை தெரிவித்துள்ளனர்.

தச்சடம்பன் பெரியபுளியங்குளம், முறிகண்டிக்குளம் ஆகிய குளங்களைப் புனரமைப்பதற்கென நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நீண்ட காலமாக இப்பகுதியில் நிலவிய இராணுவ நடவடிக்கைகளினால் இக்குளங்களின் அணைக் கட்டுக்களிலும் குளங்களை அண்மித்த பகுதிகளிலும் கண்ணிவெடிகள், மிதிவெடிகள், பொறிவெடிகள் என்பன புதைக்கப்பட்டிருக்கின்றன.

இதனால், புனரமைப்பு வேலைத்திட்டங்கள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன.

இந்நிலை நீடித்தால் இதற்கென ஒதுக்கப் பட்ட நிதிகள் யாவும் திரும்புவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் உடன் கவனமெடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கமக்கார அமைப்பினர் கேட்டுள்ளனர். (4-203-341)




## சிறுவர் தின நிகழ்வுகள்

புதுக்குடியிருப்பு,ஒக்.16

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் கடந்த முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் வெகு சிறப்பாக இடம்பெற்றன.

தமிழர் புனர்வாழ்வு கழகம், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், வலயக்கல்விப்பணிமனை என்பன இணைந்து இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன.

முதல்நிகழ்வாக புதுக்குடியிருப்புச் சந்தியில் இருந்து பிரதம விருந்தினர், சிறார்கள் 'பாண்ட்' இசை அணிவகுப்புடன் வரவேற்கப்பட்டனர். சிறார்கள் அலங்காரமாக மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

பின்னர் நடைபெற்ற நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லை மாவட்ட பணிப்பாளர், முல்லை மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

புதுக்குடியிருப்பு, வேணவில் சிறமுருகானந்தா வித்தியாலய மாணவர்களின் நாடகமும் இடம்பெற்றது.

சிறுவர்களைக் கௌரவிக்கும்முகமாக பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

(4-353)

# கமநல நிலையங்களுக்கு விவசாய இயந்திரங்கள்

## 'நிக்கொட்' நிறுவனம் வழங்கியது

பரந்தன்,ஒக்.16

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தினால் விவசாய இயந்திர உபகரணங்கள வழங்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை உருத்திரபுரம், பளை, பூநகரி, கிளிநொச்சி, இராமநாதபுரம், புளியம்பொக்கணை, முழங்காவில், அக்கராயன் ஆகிய பிரதேசங்களிலுள்ள கமநல சேவை நிலையங்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் இ.இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சி.ஆனந்தராசா ஆகியோர் உரையாற்றினர்.

மேற்படிக் கமநல நிலையங்களுக்கும் நீர் இறைக்கும் இயந்திரங்கள், உழவு இயந்திரங்கள், கைத்தெளிகருவிகள், இயந்திரத் தெளிகருவிகள் என்பன வழங்கப்பட்டன. இந்த இயந்திரங்கள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்கப்படவிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

(4-352)

## பூநகரி மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்

பூநகரி,ஒக்.16

எக்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் கரிற்றாஸ் கியூடெக் வன்னி மனித முன்னேற்ற நடுநிலையத்தால் பூநகரி பிரதேச செயலகத்தின் பள்ளிக்குடா, நாச்சிக்குடா, கௌதாரிமுனை போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளில் 50 பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பூநகரி தொழிற் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

தலா 22 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடிவலைகளை பள்ளிக்குடாவில் 25 பயனாளிகளுக்கும், நாச்சிக்குடாவில் 15 பயனாளிகளுக்கும், கௌதாரிமுனையில் 10 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டன. (4-403-202)

## பூநகரியில் குளங்களைப் புனரமைக்க 'கெயர்' திட்டம்

பூநகரி,ஒக்.16

'கெயர்' நிறுவனம் 'லிப்ற்' திட்டத்தின் கீழ பூநகரிப் பிரதேசத்தின் ஆலங்கேணிப் பகுதியில் உள்ள புறக்குளம், மட்டுவில் நாடு கிழக்குப் பகுதியில் உள்ள கறுக்காப்பள்ளிக்குளம் என்பவற்றைப் புனரமைக்கவுள்ளது.

அத்துடன் கௌதாரிமுனை உப்புநீர்க்கட்டு நீர்ப் போக்கிகள் அமைக்கப்படவிருப்பதாகவும் பூநகரிப் பிரதேச கமநல உத்தியோகத்தர் என்.சுந்தரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்தப் புனரமைப்பு வேலைகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4-403)

# வன்னிப்பகுதி விவசாயிகளுக்கென அதி நவீன அறுவடை இயந்திரம்

## வன்னி வேளான் தொழில்நுட்ப நிறுவனம் தருவித்தது!

பரந்தன்,ஒக்.16

வன்னிவேளான் தொழில்நுட்ப நிறுவனம் வன்னிப்பிரதேச விவசாயிகளுக்கென அதி நவீன நெல் அறுவடை இயந்திரம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி மன்னார் ஆண்டான் குளத்தில் நடைபெற்ற சிறுபோக அறுவடை விழாவின்போது இந்த நவீன வசதிகள் அடங்கிய நெல் அறுவடை இயந்திரம் மூலம் நெல் அறுவடை செய்து காண்பிக்கப்பட்டது.

இந்த இயந்திரத்தின் மூலம் ஒரு மணித்தியாலத்தில் ஓர் ஏக்கர் வயல் நெல் அறுவடை செய்யமுடியும்! அத்துடன், இவ்இயந்திரம் தானே சூடு மிதித்து, தூற்றித் துப்புரவு செய்து 12 மூடை வரையான நெல்லைச் சேமித்து வெளியேற்றும் வலுக்கொண்டது.

இவ்வியந்திரம் மூலம் நெல் அறுவடை செய்ய ஓர் ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபா மட்டுமே செலவாகின்றது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 8-10 வரையான ஏக்கர்கள் அறுவடை செய்யமுடியும்.

அறுவடைக்கு உரியகாலத்தில், பயிர்கள் சாய்ந்து கிடக்கின்ற நெற்கதிர்களையும் அறுவடை செய்யக்கூடியவகையில் இது வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வயல்கள் ஈரமாக இருக்கின்ற போதிலும் இதனால் அறுவடை மேற்கொள்ள முடியும்.

அறுவடையின்போது துப்புரவாக்கும் நெல்லைச் சேமித்துக் கழிவுகளை உடனடியாக அகற்றி நெல்லைப் பொதி செய்வதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் வேலைப்பழுவைக் குறைத்து விவசாயிகள் அதிகளவு நன்மைகளைப் பெற இந்த இயந்திரம் பெரிதும் உதவும் என்று தெரிவிக்கப்பட்டது. (4-352-204)

## கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனத்தில்

# உயர்தகைமைப் பயிற்சி அடுத்தமாதம் ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் கட்டுமானத் தொழில்நுட்பவியல் பயிற்சிநெறி, மரவேலை தொழில்நுட்பவியலாளர் பயிற்சிநெறி ஆகியவற்றைப் பூர்த்தி செய்தவர்களுக்கான உயர்தகைமைப் பயிற்சி நெறி அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சிநெறிக்கான அனுசரணையினை வவுனியா 'போரூட்' நிறுவனம் வழங்கவுள்ளது.

இப்பயிற்சியின் அறிமுக ஒருநாள் பயிற்சிப்பட்டறை அண்மையில் நடைபெற்றது. கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனத்தில் கடந்த 27ஆம் திகதியும் பூநகரிப் பிராந்திய நிலையத்தில் 28ஆம் திகதியும், கண்டாவளைப் பிராந்திய நிலையத்தில் 29ஆம் திகதியும். பளைப் பிராந்திய நிலையத்தில் 12ஆம் திகதியும் இப்பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. ஒவ்வொரு நிலையத்திலும் தலா 50 பேர் வீதம் 200 பேர் இதில் பங்குகொண்டனர்.

இவர்கள் அனைவரும் உயர்தகைமைப் பயிற்சி நெறியினைப் பெறவுள்ளனர்.

பயிற்சிப் பட்டறையின் வள அணியினராக அன்னை இல்ல இயக்குநர் வணபிதா றெஜி னோல்ட் அடிகளார் தலைமையிலான அணியினரும், முன்னாள் கிளிநொச்சி மாவட்ட திட்டப் பணிப்பாளரும் தமிழர் புனர்வாழ்வுக்கழக முகாமையாளருமான எ.நாகேந்திரன், 'போரூட்' நிறுவன மனிதவள மேம்பாட்டுப்பிரிவு கிளிநொச்சி, முல்லை மாவட்ட இணைப்பாளர் உதயணன், கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்ப நிறுவன நிர்வாக உத்தியோகத்தர் கு.சேரன் ஆகியோரும் கலந்துகொண்டு பயிற்சியினை வழங்கினார்கள்.

(4-405)

# மண்ணெண்ணெய் என நினைத்து பெற்றோலை அடுப்பினுள் ஊற்றியவேளை தீ விபத்து!

## கணவனுக்கும் மனைவிக்கும் எரிகாயம்

பூநகரி,ஒக்.16

மண்ணெண்ணெய் என நினைத்து பெற்றோலை அடுப்புக்குள் ஊற்றி தீ மூட்டிய வேளை ஏற்பட்ட தீ விபத்தினால் கணவன், மனைவி இருவரும் எரிகாயங்களுக்கு உள்ளாகினர்.

பூநகரிப் பள்ளிக்குடாப் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த சுரேந்திரன் (வயது 20), சு.மேரி டொறின் (வயது 20) ஆகிய இருவருமே எரிகாயங்களுக்கு உள்ளாகினர்.

அடுப்பு மூட்டிய மனைவி மீது தீப்பற்றியதைக் கண்ட கணவன் தீயை அணைப்பதற்கு முயற்சித்தார். அப்போது அவரும் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (4-403-202)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக பணியாளர்களான
திருமதி சி.மலர்விழி அவர்களின் அன்புத் தந்தையாரும்
திரு.இ.சிவகுமாரன் அவர்களின் அன்பு மாமனாருமான
நெடுந்தீவைச் சேர்ந்த

### நாகமுத்து ஐயாத்துரை

*(ஓய்வுபெற்ற வைத்திய ஊழியர்)*

அவர்களின் மறைவினால் துயருறும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அரசினர் ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.** (37648) (26-14-44) **- பணியாளர்கள், உத்தியோகத்தர்கள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 12 - 03 - 1947



இறப்பு 16 - 09 - 2004

### அமரர் வேலுப்பிள்ளை நடேசு

அன்புத் தெய்வமே!
கண்ணோரம் நீர் கசிந்து முடியவில்லை
31ஆம் நாள் ஆனதையா!
மாறாத நினைவு தன்னை மனதிலே
வரைந்து கொண்டு
தவறாமல் உமையே தினம் தினம்
எண்ணுகின்றோம் ஐயா!
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு
ஆனால் 'ஐயா' என்று அழைக்க
யாருமில்லையே!

16-09-2004 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (16-10-2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொணடு தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

எங்கள் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், வெளிநாட்டில் இருந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், எங்கள் துயரில் பங்குகொண்டவர்களுக்கும், எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கிளான், (37649) (26-14-44)
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

தகவல்:
பாலரெட்ணம் குணவதி

## வீதி பலத்த சேதம்

வலி.தென்மேற்கு,ஒக்.16

மாதகல் செபஸ்தியார் வீதி கடந்த 20 வருட காலமாக திருத்தப்படாமல் உள்ளதால் போக்குவரத்தில் தாம் பெரும்சிரமங்களை எதிர்கொள்வதாகப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் மழை காலத்தில் வெள்ள நர் அதிகளவில் தேங்கிவிடுகின்றது என்றும் -

எனவே, குறிப்பிட்ட வீதியை விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி மாதகல் காந்திஜி சனசமூக நிலையம், வலி. தென்மேற்கு பிரதேசசபைச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

(எ-135)

## நிர்வாக உறுப்பினர் நியமனம்

தென்மராட்சி,ஒக்.16

வடக்கு - கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் நிர்வாக உறுப்பினராக யாழ்.சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த சின்னத்துரை குலராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் செயலாளர் கடந்த நான்காம் திகதி தொடக்கம் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

(10-117)

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.16

வடமாகாண மதுவரி உத்தியோகத்தர் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தபால் திணைக்களம், மதுவரித் திணைக்களம், மாவட்ட செயலகம், மாநகர சபை, யாழ். கல்வி வலயம், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் திக்கம் வடிசாலை ஆகியவற்றின் அணிகள் இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன. (10-5)

## அரையிறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியும், ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன.

(10-5)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை செல்வநாயகம்

(ஓய்வுபெற்ற ஊழியர், இ.போ.ச.)

கோண்டாவில் நெட்டிலைப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்வநாயகம் கடந்த 12.10.2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை (செட்டியார்) - சரஸ்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற திருமதி நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் புஸ்பலீலா, செல்வரத்தினம் கனகரத்தினம், பஸ்பலீலா குணரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் (கணேசு), முத்துலிங்கம் மற்றும் நடராஜா ஆகியோரின் அருமை மைத்துனரும் திருமதி சாந்தினி கனகநாயகம் (ஆசிரியை, யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), சாரதா, சாந்தலிங்கம் (ஹொலண்ட்), சாந்தகுமார் (ஹொலண்ட்), சாந்தரூபி (நோர்வே), சாந்தரூபன் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இ.வை.கனகநாயகம் (ஆசிரியர், யா/இணுவில் மத்திய கல்லூரி), காலஞ்சென்ற அருணகிரிநாதன் மற்றும் வாசுகி (கொழும்பு), லதா (ஹொலண்ட்), முரளிதரன் (நோர்வே), டயானா ராணி (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பவதாரிணி (யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி - முதலாம் வருடம்), நந்தினி, வரோதயன், யசோதரன், மேனகா, கஸ்தூரி, றமிசன், சாருகன், நிஷாந்தன், யூனியா ஆகியோரின் செல்லப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கடந்த 13.10.2004 புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இணுவில் கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*M.S.Lane,* (37652)(34-14-44-26)
*நெட்டிலைப்பாய், கோண்டாவில்.*

தகவல்:
**இ.வை.கனகநாயகம**
(ஆசிரியர்).

### திருமதி கனகாம்பிகை இராமநாதன்

(பால்ராஜ்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை இராமநாதன் நேற்று (15.10.2004) வெள்ளிக்கிழமை காலை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதனின் (பால்ராஜ்), அன்பு மனைவியும் புவனேந்திரன் (புவி - நல்லூர்), சறோஜா (கனடா), சர்வேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜலக்ஷ்மி, விக்கினேஸ்வரன் (கனடா), தர்ஷினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜானகி, சீத்தா, ராம்ராஜ், அர்ச்சனா, அபிராமி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் கமலாம்பிகை (திருநெல்வேலி), சரசு (மட்டக்களப்பு), காலஞ்சென்றவர்களான புஷ்பம், சிவப்பிரகாசம், சிவசோதி, சிவராஜா, சிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி (லண்டன்), யோகராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

375, கோயில் வீதி, நல்லூர்.
**T.P.:021 222 2164.** (37654)(34-14-44-26)

தகவல்:
**இ.புவனேந்திரன்**
(மகன்).



# தமிழ்மொழிமூலம் பயிற்சிபெற்ற தாதியருக்கு தனிச் சிங்களத்திலான சான்றிதழ்கள்

கோப்பாய்,ஒக்.16

தமிழ்மொழி மூலம் பயிற்சிபெற்ற யாழ். மாவட்டத் தாதியர்களுக்கு தனிச் சிங்களத்திலான சான்றிதழ்களை வழங்கியுள்ளமையால் சான்றிதழ்களைப் பெற்ற தாதியர்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:-

1999 - 2002 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ்.தாதியர் பயிற்சிப் பாடசாலையில் தமிழமொழி மூலம் பயிற்சி பெற்றுச் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் கடந்த 13ஆம் திகதி யாழ்.தாதியர் பயிற்சிப் பாடசாலையில் வைத்து சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டன.

இச்சான்றிதழ்கள் அனைத்தும் தனிச் சிங்களத்தில் அமைந்துள்ளமையினால் தமது தாய்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது எனவும், குறைந்த பட்சம் ஆங்கிலத்திலாவது இச்சான்றிதழை வழங்கியிருக்கலாம் எனவும் தாதியர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களுக்கு வரும் பெரும்பாலான சுற்றறிக்கைகளும் தனிச் சிங்களத்தில் வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(10-203-72)

# சண்டிலிப்பாய்ப் பிரதேச் செயலக கலை, கலாசார விழா

வலி.தென்மேற்கு,ஒக்.16

வலி.தென்மேற்கு பிரதேச செயலகம் இவ்வருடத்திற்கான கலை, கலாசார விழாவை இம்மாதம் 30 ஆம் 31 ஆம் திகதிகளில் மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடத்தவுள்ளது.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அரங்கில் முதல் நாள் விழாவும், கலையரசு சொர்ணலிங்கம் அரங்கில் இரண்டாம் நாள் விழாவும் நடைபெறும்.

நாட்டுக்கூத்து, கிராமிய நடனங்கள், நடனம், நாட்டிய நாடகங்கள், கர்நாடக சங்கீதம், இன்னிசை, பட்டிமன்றம் ஆகிய பல்வேறு நிகழ்வுகள் இக்கலை, கலாசார விழாவில் இடம் பெறவிருப்பதாக பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தெரிவித்தார்.

(10-135)

# ஸ்கந்தவரோதயக் கல்லூரி நாடகக்குழு கொழும்பில் கௌரவிக்கப்பட்டது

வலி.தெற்கு,ஒக்.16

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தமிழத் தினவிழாப் போட்டிகளில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் நடித்த 'கருவறையில் இருந்து' என்ற நாடகத்தில் நடித்த நடிகர்களையும் நாடகத்தை நெறியாள்கை செய்த ஆசிரியரையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய ரீதியில் இம்முறை நடைபெற்ற தமிழ்த்தினம் தொடர்பான நாடகப்போட்டியில் ஸ்கந்தவரோதய மாணவர்கள் நடித்த அந்த நாடகம் முதலிடத்தைப் பெற்றிருந்தது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினின் ஏற்பாட்டில் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் மேற்படி நாடகம் மீண்டும் மேடையேற்றப்பட்டதுடன், நாடகத்தில் நடித்த மாணவர்களும் நாடகத்துறைப் பொறுப்பாசிரியர் கந்தையா ஸ்ரீகாந்தவேலும் பழைய மாணவர் சங்கத்தினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவரும் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் உப தலைவரும், முன்னாள் யாழ்ப்பாண மாநில கல்விப் பணிப்பாளருமான இரா.சுந்தரலிங்கம் தலைமையில் இப்பாராட்டுவிழா நடைபெற்றது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் உப தலைவர் சட்டத்தரணி தங்கராசா வாழ்த்துரை வழங்கினார்.

பாராட்டுவிழாவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் பதிலுரை வழங்கினார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட நாடகக்குழுவினரின் போக்குவரத்துச் செலவு, தங்குமிட வசதி, உணவு போன்ற சகல ஏற்பாடுகளையும் பழையமாணவர் சங்கக் கொழும்புக் கிளையினர் செய்துகொடுத்திருந்தனர்.

(10-152)

# இருபது ஜோடிகளுக்கு இலவசத் திருமணம்

நவாலி,ஒக்.16

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும், நல்லூர் பிரதேச லயன்ஸ்கழகத்தினரும் இணைந்து காக்கைதீவு குடியேற்றத் திட்டத்தில் குடியிருக்கும் 20 ஜோடிகளுக்கு இலவசத் திருமணங்களை நடத்திவைத்துள்ளனர்.

ஆனைக்கோட்டை கிராமசேவையாளர் ச.சந்திரராசா தலைமையில் மருத்துவபீட மாணவர்களும் லயன் தலைவரும் முன்னின்று இத்திருமணங்களை நடத்தியதுடன், திருமண அத்தாட்சிப் பத்திரங்களையும் உடன்வழங்கினர்.

மேலும் இக்குடியேற்றத்திட்டத்தில் இலவச கண் சிகிச்சை முகாமொன்றும் விரைவில் நடத்தப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. (10-100)

# கைதடிச் சந்தை மீண்டும் இயங்குகிறது

கைதடி,ஒக்.16

யுத்த நடவடிக்கையின்பின் புனரமைக்கப்பட்ட கைதடிச் சந்தை மீளஇயங்க ஆரம்பித்துள்ளது.

இச்சந்தை சாவகச்சேரிப் பிரதேச சபையின் முயற்சியினாலும் பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் புனரமைக்கப்பட்டு தியாகி திலீபன் ஞாபகார்த்த தினத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சந்தையில் மட்டுவில், நாவற்குழி, கைதடிப் பிரதேச மக்கள், தினமும் பொருள்களைக் கொள்வனவு செய்வதைக் காணமுடிகிறது.

(10-75-204)

# நல்லூர் பிரதேச செயலகத்தின் முதியோர், சிறுவர் தினவிழா

வலி.வடக்கு,ஒக்.16

நல்லூர் பிரதேச செயலக முதியோர் சிறுவர் தினக்கொண்டாட்டம் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.

பழம் உண்ணுதல், முட்டி உடைத்தல், ஓட்டப போட்டி, போத்தலில் நீர் நிரப்புதல் போன்ற போட்டிகள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்ட மிகவும் வயதில்கூடிய முதியோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நூறு வயதைத் தாண்டிய திருமதி எஸ். ஞானாம்பிகை உட்பட வே.சிவராமலிங்கம், எஸ்.நாகராசா, வி.கே. சண்முகராசா ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட வயோதிபர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மற்றும் சிறுவர் முதியோர் தினத்தையொட்டி இடம்பெற்ற கட்டுரைப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.


நாடகங்கள், வில்லுப்பாட்டு, நடனம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (10-86)





புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் தினத்தின்போது வெளியிடப்பட்ட 'சோமாஸ்கந்தன்' கல்லூரிச் சஞ்சிகையினைக் கல்லூரி அதிபர் வ.ஆறுமுகத்திடமிருந்து கல்லூரியின் தர்மகர்த்தா சபைத் தலைவரும் வலயக் கல்விப் பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

(எ)





# உலக உணவு தினக் கொண்டாட்டங்கள்

வலி.தெற்கு,ஒக்.16

உணவு பாதுகாப்புக்கான உயிரியல் பல்லினத் தன்மையைத் தொனியாகக் கொண்டு இன்று சனிக்கிழமை உலக உணவு தினமாகக் கொண்டாடுமாறு விவசாய, கால்நடை, காணி, நீர்ப்பாசன அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் உள்ள கமநல சேவை உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்கள், விவசாயிகள், ஏனைய விவசாயம் சார்ந்த திணைக்கள உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து இத்தினத்தைக் கொண்டாடவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் புங்குடுதீவு, வேலணை, தொல்புரம், கீரிமலை, உடுவில், நல்லூர், உரும்பிராய், புலோலி, கைதடி, சாவகச்சேரி போன்ற இடங்களில் உள்ள கமநல சேவை நிலையங்களைச் சார்ந்த விவசாய போதனாசிரியர் பிரிவுகள் உலக உணவு தினக் கொண்டாட்டங்களுக்குரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இத்தினத்தில் உணவு உற்பத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள், உணவு உற்பத்தித் தயாரிப்புகள், உணவுப் பாதுகாப்பு, சத்துணவாக இலைக்கஞ்சி தயாரித்தல், சிரமதான அடிப்படையிலான பாதீனியக் கட்டுப்பாடு மற்றும் பழவகைகளில் இருந்து ஜாம், பழச்சாறு என்பவற்றை தயாரித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் மக்களை ஈடுபடுத்த ஒவ்வொரு பிரிவு விவசாய போதனாசிரியர்களும் உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

(10-152)

# தென்மராட்சிப் பிரதேச செயலகம் திங்கள்முதல் டச்சுவீதியில் இயங்கும்

தென்மராட்சி,ஒக்.16

சாவகச்சேரி பழைய பொலீஸ் நிலையத்துக்கு அருகில் இயங்கிவந்த தென்மராட்சிப் பிரதேச செயலகம் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் சாவகச்சேரி டச்சுவீதியில் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு அருகிலுள்ள தனியார் கட்டடத்திற்கு இடம்மாறவுள்ளது.

சாவகச்சேரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலகக் கட்டடம் இம்மாதம் முற்பகுதியில் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் வேலைகள் பூர்த்தியடையாததால் டச்சுவீதிக்கு இடம்மாறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அன்றையதினம் பிரதேச செயலக உப அலுவலகம் கண்டிவீதி, கொடிகாமத்தில் உள்ள தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் இயங்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

(10-117)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அண்மையில் நெடுந்தீவுப் பிரதேச சபையினால் பிரதேச சபையின் பொது நூலக மண்டபத்தில் நடத்தப்பட்ட புத்தகக் கண்காட்சியினை யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும் மற்றும் அலுவலர்களும் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

(படம்: நெடுந்தீவுச் செய்தியாளர்)

# வாகன உடைமை மாற்றும் படிவங்களுக்குத் தட்டுப்பாடு

கைதடி,ஒக்.16

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் பலவற்றில் வாகன உடைமை மாற்றப் படிவங்களுக்கு அண்மைக் காலமாகத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், பலர் தமது வாகனங்களை உடைமை மாற்றம் செய்யமுடியாமல் அல்லற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இநத வாகன உடைமை மாற்றப் படிவங்கள் பிரதேச செயலகங்களில் ஒரு பிரதி இருபத்தைந்து ரூபா என்றளவில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

ஆனால், தற்போது அதனை இலவசமாகப் பொதுமக்களுக்கு விநியோகிக்கும்படி மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் பிரதேச செயலங்களுக்கு பணிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பணிக்கப்பட்டபின் திடீரென இப்படிவங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது.

இதேவேளை, பிரதேச செயலகங்கள் சிலவற்றில் கடமைபுரியும் ஊழியர்களில் சிலர் இப்படிவங்களை மறைமுகமாக விற்பனை செய்து வருவதாகவும் வாகன உடைமையாளர்களால் புகார்கள் கூறப்படுகின்றது.

ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்படிவங்கள் வாகன உடைமையாளர்களுக்கு இலகுவாகவும், இலவசமாகவும் கிடைக்க ஆவன செய்யவேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

(10-75)

Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7426924 முதல் 7439164 வரை

சீட்டிழுப்பு இல. 76 திகதி 14-10-2004

வெற்றி எண்கள் **7 4 6 6 5 5** சுப்பர் எண் **5**

**சுப்பர் ஜக்பொட் பரிசு 1,17,11,125/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,17,11,125/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 5,000/- | 5,40,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,089 | 500/- | 5,44,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,872 | 50/- | 5,43,600/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,07,748 | 10/- | 10,77,480/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 5,000/- | 50,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 112 | 1,000/- | 1,12,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,083 | 100/- | 1,08,300/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,776 | 20/- | 2,15,520/- |
| மொத்தம் | 1,31,819 | | 53,94,000/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,94,000/-

இந்த திங்கட்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,20,13,450/-**

தொடர் இல. 6470275 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 18 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

**அபிவிருத்தி லொத்தர் சபை**
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**7437014-9-32**
**7433250-4-07**
**7434527-8-15**
**7435669-8-56**
**7437648-0-42**
**7429179-4-95**
**7433800-4-48**
**7433292-6-08**


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் 10.10.2004 அன்று நடைபெற்ற தேசிய மட்டத் தமிழ் மொழித்தின நாட்டிய நாடகப் போட்டியில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்த யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி நாட்டிய நாடகக் குழுவினரையும் நெறியாள்கை செய்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,*
*யாழ். இந்துமகளிர் கல்லூரி.*

(சி-38233)(34-33-15-16)

## கோழி வளர்ப்போருக்கு கருத்தரங்கு

வடமராட்சி,ஒக்.16

கோழிவளர்ப்பில் நவீன உத்திகளைக் கையாள்வது தொடர்பாக பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கோழி வளர்ப்போருக்கென மாதாந்த அரைநாள் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

இம் மாதத்துக்கான கருத்தரங்கு எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வைத்திய அதிகாரி பணிமனையில் கால்நடை வைத்திய அதிகாரி சி.வசிகரன் தலைமையில் நடைபெறும்.

(10-173)

## வெண்மை வாணிப சங்கங்களின்
## யாழ்.மாவட்ட ஒன்றிய அறிவித்தல்

மேற்படி ஒன்றியமானது யாழ். மாவட்டத்தில் வெண்மைத் தொழில்செய்யும் அனைவருக்கும் அறியத்தருவது யாதெனில் 2005 ஆம் ஆண்டுக்கான வைத்தியசாலை, பல்கலைக்கழகம், விடுதி இல்லங்கள், பொதுநிறுவனங்கள், பராமரிப்பு நிலையங்களில் வெண்மைசெய்யும் ஒப்பந்தகாரர்களை ஒப்பந்தம் செய்வதற்கு முன் எம்முடன் தொடர்புகொள்ளும்படியும் அத்தோடு இதுவரை காலமும் எமது சங்கத்தில் பதிவுசெய்யாத வெண்மைத் தொழிலாளர்களையும் எம்மோடு தொடர்புகொள்ளுமாறும் அன்புடன் கேட்டுகொள்கின்றோம்.

சி.கி.பால்ராஜ்
**தலைவர், வெண்மை வாணிப சங்கங்களின் யாழ். மாவட்ட ஒன்றியம்.**

அலுவலக முகவரி:
335, அரசடி வீதி, நல்லூர்.

(37653)(34-33-15-16)

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் சௌந்தரராஜா

**(நயினாதீவு)**



நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி காமாட்சி அம்பாள் கோயிலடியைப் வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சௌந்தரராஜா 03.10.2004 ஞாயிற்றுக்கிழமை டோகாவில் அகால மரணமானார்.

அன்னார் புஸ்பவதியின் அன்புக் கணவரும் சாருகா, நிலக்ஷன், தர்ஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் நயினாதீவு இராமலிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் மகனும அமரர்களான முத்துவேலு - மனோன்மணி தம்பதிகளின் மருமகனும் கோகுலராஜா(Saipan), சரோஜாதேவி, இந்திராதேவி (ஆசிரியை, கரம்பொன் சிறிய புஸ்ப ம.ம.வி.) ஆகியோரின் சகோதரனும் பேரின்பநாதன் - சகுந்தலாதேவி (ஜேர்மனி), பவளம், பேரின்பதாஸ் (Saipan), மதிசூடி ஆகியோரின் மைத்துனரும் ஜெயந்தன், மதுஷன், கௌசிகா ஆகியோரின் சிறிய தந்தையும் துஸ்யந்தன் - பபிதா (கனடா), ஹரிஹரன் (ஹொலண்ட்), பிரகாஸ், தூபிரா, செந்தூரன், ஆரூரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் அமரர் கணேசையா - காமாட்சியம்மாவின் பெறாமருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2004) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காமாட்சி அம்பாள் கோயிலடி,*
*நீர்வேலி.* (37650)(34)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## முத்தையா செல்வராஜா

**(முன்னாள் உதவி ஆணையாளர், கூட்டுறவு)**



யாழ்ப்பாணம், கந்தர்மடம், பழம் வீதிப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா செல்வராஜா (ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர், கூட்டுறவு) அவர்கள் 14.10.2004 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.முத்தையா (எஸ்டேட் சுப்பிரின்டன்) - திருமதி முத்தையா ஆகியோரின் அன்பு மகனும் சபாபதிப்பிள்ளை (ரெஜிஸ்டார், நுணாவில்) - திருமதி சபாபதிப் பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கோமளேஸ்வரியின் (ரோஸ்) பாசமிகு கணவரும் சிறீதரன், சிறீரஞ்சினி, சிறீ சபாறஞ்சன், காலஞ்சென்ற சிறீமுகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமாரி ஜெயந்தகுமார், சுபோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் இந்தன், யாழினி, ஜோதினி, முகுந்தன், மிந்தன் ஆகியோரின் அருமைப் பாட்டனும் காலஞ்சென்றவர்களான சிவயோகம், இராஜநாயகி, சிவஞானம் (முன்னாள் நன்னடத்தை அதிகாரி), குமாரசாமி (முன்னாள் கூட்டுறவு ஆணையாளர் அலுவலக பிரதம இலிகிதர்) லண்டனில் வசிக்கும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2004) சனிக் கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*இல.05, பழம் வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
(37651)(34-14-44-26)

தகவல்:
**கலாநிதி க.சிதம்பரநாதன்**


## விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்

இந்திய மத்திய அரசு அங்கிகாரம் பெற்ற நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
சேலம் - 636 308, தமிழ்நாடு, இந்தியா.

தாய்லந்து அரசு அங்கிகாரம் பெற்ற பாங்கொக், தாய்லாந்து Rangsit பல்கலைக்கழகம் இணைந்து நடாத்தும் இளநிலை மருத்துவ பட்டப்படிப்பு

**International Off-Shore Medical Program - MBBS**

முதலாவது கற்கைநெறி அனுமதி அறிவிப்பு - (2004 - 2005)

**இக்கற்கைநெறி**

- முதல் இரண்டு ஆண்டு மருத்துவக்கற்கை நெறி, மற்றும் பயிற்சி வகுப்புக்கள் தாய்லாந்து Rangsit பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடாத்தும்.
- அடுத்து 2 -1/2 ஆண்டு மருத்துவ கற்கை நெறியும் பயிற்சியும், ஓராண்டு உள்ளகப் பயிற்சிநெறியும் இந்தியா, தமிழ்நாடு விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவன மருத்துவக் கல்லூரியிலும் நடைபெறும்.
- மேற்படி கற்கைநெறிகள் யாவும் இந்திய மருத்துவக் கழகத்தின் (Medical Council of India) ஒழுங்கமைப்பிற்கு ஏற்ப நடாத்தப்படுகின்றது.
- விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், (நிகர்நிலைப் பல்கலைக்கழகம் - **Deemed University**) **M.B.B.S** பட்டத்தினை வழங்கும்.

**தகைமைகள்**

- இலங்கை அல்லது வெளிநாட்டு மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் (அல்லது அதற்கு சமமானது)உயிரியல், இரசாயணவியல், பௌதீகம் ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு

பதிவாளர் - விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்

சேலத்தில்
NH-47, Sankari Main Road,
Ariyanoor, Salem 636 308,
☎ 91 427 2477316, 317,833
Fax: 91 427 2477903
E-mail: vmrf@vinayakamissions.com


சென்னையில்
160 (208), Poonamalee High Road,
Kilpauk, Chennai : 600 010
☎ 91 44 2825 5060, 2811, 3776
Fax : 91 44 28241708
Email: admissions@vinayakamissions.com

www.vinayakamission.com & www.isu.ac.th

இலங்கை ஒருங்கிணைப்பாளர்

**nn educonsult**
181/1 W.A சில்வா மாவத்தை, கொழும்பு 06.
☎ 011 555 88 33, Fax : 011 555 88 44, Email: nnconsult@sltnet.lk

Piccaso



நல்லூர் செங்குந்தா பொதுச்சந்தையின் புதிய கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் நாடாவைவெட்டி கட்டடத்தைத் திறந்து வைப்பதையும், மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராஜா திறப்புவிழா நினைவுக்கல்லைத் திறந்துவைப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அலுவலக படப்பிடிப்பாளர்)

# ஜனநாயக வேடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் அமைப்பில் கருணா இருந்த சமயம் அவருக்கு எதிராக தலைமை ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது புலிகளின் தலைவர் பிரபாகரன் கிழக்கு மாகாணத்தை - குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை - சேர்ந்தோரை ஒதுக்குகின்றார் அல்லது ஒடுக்குகின்றார் எனக் குற்றச்சாட்டுக்களை அடுக் கியவர் கருணா.

ஆனால், அவரது பெயரில் இப்போது உருவாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கும் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் என்ற கட்சியில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மாறாக புலிகளுக்கு எதிரான பல்வேறு தனித்தனி ஆள்களுக்கு அதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

கட்சியின் செயலாளராகக் கூறப்பட்டவர் ஞானராஜா. இவர் பரந்தனைப் பிறப்பிடாமாகக் கொண்டவர். ஈ.என்.டி.எல்.எவ்வைச் சேர்ந்த பரந்தன் ராஜனின் சகோதரர்.

பரந்தன் ராஜன் புளொட் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் ஈ.என்.டி.எல்.எவ்வை உருவாக்கி இந்தியத் தரப்பின் எடுபிடி அமைப்பாக அதைச் செயற்படுத்தியவர். இந்திய அமைதிப் படை இலங்கையில் நிலைகொண்டிருந்த போது அதன் கூலிப்படைபோன்று ஈ.என்.டி.எல்.எவ். செயற்பட்டது. இந்தியப் படை நாடு திரும்பிய பின்னர் இந்தியாவைத் தளமாகக் கொண்டு செயற்படுபவர் பரந்தன் ராஜன். அவரின் சகோதரர் மூலம் கருணா அணிதிரட்டப்பட்டிருக்கின்றார்.

லண்டனில் இருந்து வானொலி சேவை நடத்தும் ஒருவர், டென்மார்க்கில் புலிகளுக்கு எதிராகச் செயற்படும் ஒருவர், பாங்கொக்கை மையமாக வைத்து இணையத்தளம் ஒன்றின் ஊடாக புலிகள் எதிர்ப்புப் பிரசாரம் நடத்தும் வடமராட்சியைச் சோந்த நபர் ஒருவர் என்று பல புலி எதிர்ப்பு ஆள்களே கருணா அணியின் பின்னால் வந்துள்ளனர் என்று பரசாரப்படுத்தப்படுகின்றது. இவர்கள் எவரும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அல்லர்.

இவர்களை கருணாவின் பெயரில் ஒன்றுதிரட்டி -

ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா, ஈரோஸின் சங்கர் ராஜி மற்றும் ஆனந்தசங்கரி போன்றோரோடு ஒரே குடையின் கீழ் இயங்க வைப்பதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தலாம் என்று திட்டமிடுகின்றன மேற்படி உளவுச் சக்திகள் எனக் கூறப்படுகின்றது.

கருணா அணி என்ற பெயரில் ஒரு குழுவை இராணுவ ரீதியாகக் கிழக்கில் இயங்கவைத்து, புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சி பிசுபிசுத்துப்போய்விட்டது. இந்த நியைில் ஜனநாயகவாதி என்ற வேடத்தில் கருணாவை நிறுத்தி, அரசியல் கட்சி என்ற நாடகத்தை ஆரம்பித்து, புலிகளைப் பலவீனப்படுத்தலாமா என்ற திரைமறைவுத் திட்டம் இப்போது பரிசோதித்துப் பார்க்கப்படுகின்றது.

தனித்தனியாக இயங்கும் பலரையும் கருணா என்ற பெயரின் பின்னால் இணைப்பதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்துவது இந்த வெளிநாட்டு உளவுப் பிரிவின் சதித்திட்டமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இதற்கான மும்முர நடவடிக்கைகளில் அந்தப் பிரிவு இறங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இவற்றை மோந்து மோப்பம் பிடிப்பதில் புலிகளின் புலனாய்வுப் பிரிவு மும்முரமாக இருப்பதாக ஒரு செய்தி தெரிவித்ததது.

(ஐ-க)


## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் விசேட பொதுக் கூட்டம்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

(37658)(43-11-16) - செயலாளர்.


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 – 12 – 1949



மறைவு 12 – 10 – 1999

### திருமதி சாந்தநாயகி பீதாம்பரம்

ஆண்டுகள் ஐந்தாகிவிடினும்
ஆறிடுமோ எம் துயரம்.

*சாந்தசோலை,*
*04,கலைமகள் வீதி,*
*அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.*

-குடும்பத்தினர்.

(37662)(43-11-16)

## இணுவில் நீடித்த கரும பீடத்தில் அடகுச்சேவை

யாழ்ப்பாணம்,ஒக.16

இணுவிலில் இயங்கும் கன்னாதிட்டி மக்கள் வங்கிக்கிளையின் நீடித்த கருமபீடத்தில் தங்க நகை அடகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-ரி)

## மரண அறிவித்தல்கள்

### வீரகத்தி சின்னராசா

மானாங்கானை, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரகத்தி சின்னராசா அவர்கள் நேற்று (15.10.2004) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.50 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் பூபதியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, இராசமணி (கனடா), அழகேஸ்வரி (பருத்தித்துறை) மனோகரன், யோகேந்திரம் (கட்டார்), தர்மகுலசிங்கம் (லண்டன்), செயகுலசிங்கம், விஜயகுலசிங்கம் (லண்டன்), செல்லக்கிளி (கட்டார்), தயாணந்தன் (போராளி) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசரத்தினம், தேவதாஸ் (கனடா), சிவநேஸ்வரன் (மலேஷியா), தயாலட்சுமி, விஜயநிர்மலா (வவுனியா), மயூமி (லண்டன்), சௌதியா ஆகியோரின் மாமனாரும கலைவாணி (யாழ்பல்கலைக்கழக முதலாம் வருட மாணவி), கருணைதாஸ் (மல்லாவி,மத்திய கல்லூரி), கஜன் (சிதம்பராக் கலலூரி) மற்றும் நிரோசா, தனுஷா, மதீனா, கார்த்திகா, தமிழ்மாறன் (கனடா), லவன் (ஹாட்லிக் கல்லூரி), தக்சன் (ஹாட்லிக் கல்லூரி), அஜிங், சஜிதா, எழில், விதுஷாந், கனிசா, மினுஷா, நிதர்சனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, 12.30 மணியளவில் பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-38240)(43-11-16)

தகவல்:குடும்பத்தினர்.

### திருமதி புவனேஸ்வரி அருளம்பலம்



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.45, கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி அருளம்பலம் 2004-10-11 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அம்பலவாணர் அவர்களின் அன்பு மகளும் நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி ஆறுமுகம் அவர்களின் அன்பு மருமகளும் அருளம்பலம் (இளைப்பாறிய அதிபர், அகில இலங்கை சமாதான நீதிவான்) அவர்களின் அன்பு மனைவியும் புவனேந்திரன் (சுவிஸ்), இராஜேஸ்வரி (விஞ்ஞான ஆசிரியை, யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), பத்மநாதன் (சுவிஸ்), சந்திரேஸ்வரி (அத்தியடி), சண்முக நாதன் (கனடா), திலகேஸ்வரி (பிரான்ஸ்), வசந்தராஜன் (நோர்வே), சூரியகுமார் (சுவிஸ்), சந்திரகுமார் (H.N.B., வவுனியா, அகில இலங்கை சமாதான நீதவான்), கனகாம்பிகை (ஜேர்மனி), ஞானாம்பிகை (சங்கீத ஆசிரியை, யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்) ஆகியோரின பாசமிகு தாயாரும் காஞ்சனமாலா (சுவிஸ்), காலஞ்சென்ற புவனராஜகுகன் (தெல்லிப்பழை), சரோஜினி (சுவிஸ்), பாலசிங்கம் (அத்தியடி), அஜந்தி (கனடா), குலசேகரம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (நோர்வே), மகேஸ்வரி (சுவிஸ்), நாகேஸ்வரி (வவுனியா), தேவதாசன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (H.N.B., யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி அபிராமி கிருஷான் (லண்டன்), காலஞ்சென்ற அனந்தன் (சுவிஸ்), சிவாகினி, சுபாகினி (கந்தர்மடம்), பார்கவி (சுவிஸ்), கோபிநாத் (கனடா), ரோகிணி (அத்தியடி), பிரவீன், பிரசாந (கனடா), ஆரணி (பிரான்ஸ்), சரவணன், மயூரன், துர்க்கா (நோர்வே), பகலவன் (சுவிஸ்), கீர்த்திகா, தக்ஷனா, திலக்ஷன் (வவுனியா), ஜேசுதன், தர்ஷின, தர்ஷனா (ஜேர்மனி), ஆரபி, சாம்பவி (கலட்டி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற திருமதி தனலட்சுமி சுப்பிரமணியத்தின் (நிதான ஸ்ரோர்ஸ், புன்னாலைக்கட்டுவன் வடக்கு) சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2004) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல 45.கலட்டி அம்மன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P 021222 5229.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(37661)

## துயர் பகிர்கின்றோம்

ஜனனம் 29 – 01 – 1938

மரணம் 09 – 10 – 2004

### அமரர் ஐயாத்துரை சிவப்பிரகாசம்

(முன்னாள் தலைவர்,
மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்)

காலத்தால் அழியாத வரலாறு படைத்து
ஞாலத்தில் ஒளிர்ந்த தீபம் அணைந்தது
விடியல் காட்டும் வெள்ளி வீழ்ந்ததால்
வழிகள் தெரியாமல் வாடிவதங்கி நிற்கின்ற
உத்தம உறவுகளுக்கு எங்கள்
ஆறுதல்களைச் சொல்வதோடு
அமரத்துவம் அடைந்தவர்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மூத்த விநாயகர் சனசமூகநிலையம்,
கரணவாய்.

(சி-38236)(43-11-16)


**ராஜா** யாழ்ப்பாணம்

இப்பொழுது இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ரவிகிருஷ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்

G/7 ரெயின்போ காலனி (ரீகல்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-38041)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந், ஸ்னேகா மற்றும் பலர் நடிப்பில்



போஸ் காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

(C-37740)

சங்கானை

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் மற்றும் பலர் நடித்த

மதுர (ரீகல்)

காட்சி நேரம்:
11.00, 2.45,
6.00
(புதியநேரம்)

சினிமா பண்டத்தரிப்பு

விஜய், ஜோதிகா, கிரண் நடிப்பில்

திருமலை



காட்சிகள் தினசரி 3.00, 7.00
சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே) (ரீகல்)

**லக்ஷ்மி சினிமா** இணுவில்

சரத்குமார், ஆனந்தபாபு, விஜயகுமார், கவுண்டமணி, செந்தில் நடிப்பில்

காட்சிகள் தினசரி
11.00, 3.00, 7.00

சேரன்பாண்டியன் (ரீகல்)

அடுத்த வெளியீடு
எம்.ஜி.ஆர் நடித்த ரிக்ஷாக்காரன்

(37456)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் 30 ஆம் ஆண்டு நிறைவு

மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி



ஒக்ரோபர் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை

ஊடக அனுசரணை உதயன்

அனுசரணை SAAMSTECH

# மலையகத்தில் உள்ள தேசிய சொத்துக்களை தொண்டா பரம்பரைக்கு தாரைவார்க்க முடியாது

## சீறுகின்றன ஜே.வி.பியும் ஹெல உறுமயவும்

கொழும்பு,ஒக்.16

"மலையகத்தில் உள்ள தேசியச் சொத்துக்களை எல்லாம் தொண்டமான் பரம்பரைக்குத் தாரைவார்க்க முடியாது. தொண்டமான் ஞாபகார்த்த நிறுவனம் என்ற பெயரில், மலையகத்தில் காணப்படும் எல்லாச் சொத்துக்களையும் தனிநபர் ஒருவர் சுருட்டிக்கொள்ள இடமளிக்கமாட்டோம்.

- இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் தொண்டமான் ஞாபகார்த்த நிறுவனம் (Thondaman Memorial Foundation) என்ற பெயரில் ஓர் அமைப்பு நாடாளுமன்றத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகத் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் ஆயுட்கால உறுப்பினராக ஆறுமுகன் தொண்டமான் அல்லது அவருடைய வாரிசு என மூவர் பதவி வகிப்பர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ தற்பொழுது ஹட்டனில் இயங்கும் தொண்டமான் தொழில் பயிற்சி நிறுவனம்.

★ நோர்வூட்டில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மண்டபம்.

★ றம்பொடையில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் 7கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்து கலாசார மண்டபம்.

- இவை அனைத்தையும் தொண்டமான் ஞாபகார்த்த நிறுவனத்தின் கீழ் அதன் சொத்துக்களாக இணைக்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை இ.தொ.கா. முன்வைத்துள்ளதாம்.

எதிர்காலத்தில் மலையகத்தில் அமைக்கப்படும் கலாசார மண்டபங்கள், விளையாட்டு அரங்கங்கள் அனைத்தும் தொண்டமான் ஞாபகார்த்த நிறுவனத்துடனேயே இணைக்கப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளதாம்.

இவ்விடயங்கள் தொடர்பாக இ.தொ.கா. பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாம்.

ஆனால், ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் இந்த முயற்சியைக் கண்டித்துள்ளன. கடைசிவரை அதற்கு இடமளிக்கப் போவதில்லை என ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் மூலமும், அமைச்சுகளுக்கு ஒதுக்கப்படும் நிதியின் மூலமும் அமைக்கப்படும் தேசிய உடைமைகளை தனி ஒரு குடும்பத்திற்கோ அல்லது தனி ஒரு நபருக்கோ வழங்கக்கூடாது. அப்படி வழங்க நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராகப் போராட்டம் நடத்தியாவது அதனைத் தடுப்போம் - என ஜே.வி.பி. பேச்சாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-க)

# காவலில் உள்ள 2 ஊர்காவலர்களும் திங்களன்று பிணையில் விடுவிப்பு ?

விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் இரண்டு சிங்கள ஊர்காவலர்களும் அநேகமாக நாளைமறுதினம் தமிழீழ நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து ஆயுதங்களுடன் இவர்களைத் தாங்கள் கைதுசெய்தார்கள் எனப் புலிகள் தெரிவித்திருந்தார்கள். இந்த இருவரையும் விடுவிக்கவேண்டும் என்ற அரசின் கோரிக்கையை நிறைவுசெய்வதாயின் இதே குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு அரசின் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 10 விடுதலைப் புலிகளையும் விடுவிக்கவேண்டுமெனப் புலிகள் நிபந்தனை விதித்திருந்தனர்.

அந்தப் 10 போராளிகளும் இலங்கை நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் மேற்படி இரு ஊர்காவலர்களும் தமிழீழ நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்படுவார்கள் எனத் தெரிகிறது.

# வாகன இறக்குமதிக்கான தீர்வை நேற்றுமுன்தினம் முதல் அதிகரிப்பு

கொழும்பு,ஒக்.16

வாகன இறக்குமதிக்கான சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவுமுதல் இந்த சுங்கத்தீர்வை அதிகரிப்பு நடைமுறைக்கு வந்தது.

இதனால், வாகனங்களின் விலைகளில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஜீப், பெற்றோலில் ஓடும் பஸ் மற்றும் வான்கள் மீதான சுங்கத்தீர்வையே அதிகரிக்கப்பட்டுள்ளது. ஓட்டோக்களுக்கும் பஸ்களுக்கும் இந்தத் தீர்வை அதிகரிப்பில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

தீர்வை அதிகரிப்பின்படி ஸி.ஸி 1,500 ரக சிறிய வாகனங்களுக்கான தீர்வை 25 வீதத்தில் இருந்து 40 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான உற்பத்தி வரி 60 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிறிய பெற்றோல் வான்களின தீர்வை 48 வீதத்தில் இருந்து 60 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான உற்பத்தி வரி 48 வீதத்தில் இருந்து 72 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்தீர்வை அதிகரிப்புக் காரணமாக வாகனங்களின் விலைகள் ஒரு லட்சம் ரூபா முதல் நான்கு லட்சம் ரூபா வரை அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க-ரி)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமலை பட்டினமும், சூழலும், திரியாய், புல்மோட்டை, தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, ஈச்சிலம்பற்று, சம்பூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கும் எம்.பிக்கள் குழு விஜயம் செய்யவுள்ளது. தேவையேற்படின் அவர்கள் குழுக்களாகப் பிரிந்தும் விஜயம் செய்யக் கூடும் எனக் கூறப்படுகின்றது. (எ-க)

# ரம்ழான் நோன்பு ஆரம்பம்

கொழும்பு, ஒக்.16

நாட்டின் பல பாகங்களிலும் புனிதப்பிறை காணப்பட்டுள்ளதாகக் கொழும்பு புதுக்கடை பெரிய பள்ளிவாசல் நேற்றுத் தெரிவித்தது.

இதனையடுத்து புனித ரம்ழான் நோன்பு இன்றுமுதல் முஸ்லிம் மக்களால் அனுட்டிக்கப்படவுள்ளது. அதிகாலை 5.11 மணிக்கு ஆரம்பிக்கப்படும் நோன்பு மாலை 6.26 மணிக்குத் துறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி)

# ரணில் நேற்று நாடு திரும்பினார்

இந்தியாவிற்கான நான்கு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை 12.30 மணியளவில் நாடுதிரும்பினார்.

மேற்படி விஜயத்தில் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, எதிர்கட்சித் தலைவர் அத்வானி மற்றும் வாஜ்பாய், தி.மு.க.தலைவர் கருணாநிதி உட்படப் பல முககியஸ்தர்களை ரணில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள், இலங்கையுடனான இந்தியாவின் பொருளாதார ஒத்துழைப்பு, இந்தியா - இலங்கை நல்லுறவு உட்படப் பல விடயங்கள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் ரணில் பேசியிருந்தார். (எ-க)

## கருணாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட தஸ்தாவேஜுக்கள், வாக்கிடோக்கிகள் போன்ற பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 23ஆம் திகதி ரெஜி மற்றும் எழிலன், குயிலன் போன்றோர் மாதுறு ஓயாக் காட்டுப் பகுதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்படுவதற்கு முன்னர் இந்த முகாமிலேயே தங்கியிருந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்துவதற்கான தளமாக இந்த முகாமைப் பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டோர் உத்தேசித்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

காட்டுப் பகுதிகளுக்குரிய வரைபடங்களும், இரவு நேரத்தில் உளவுபார்க்கும் தொலைநோக்கிக் கருவிகளும் இந்த முகாமில் இருந்து மீட்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னரே இந்த முகாம் கைவிடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

எனவே, ரெஜியும் அவருடன் கொல்லப்பட்ட அவரது முக்கிய சகாக்கள் சிலரும் கொல்லப்பட்டதால் இந்த முகாம் கவனிப்பாரற்றுப் போயிருக்கின்றது. அவர்களின் இறப்போடு இந்தக் குழுவின் செயற்பாடும் பெருமளவு முடங்கிவிட்டதாகக் கூறப்படுகின்றது. (ஐ-க-ரி)

## முறிகண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களான அருள்சோதி நித்தியா(நுணாவில்), பொன்னுத்துரை நந்தகோபால்(பெரியமாவடி), செல்லத்துரை திருநாவுக்கரசு ஆகியோர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்தினால் ஏ-9 வீதியில் சிறிது நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது.

தமிழீழக் காவல்துறையினர் உடனடியாக சம்பவம் நடந்த இடத்துக்கு வந்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர். விபத்துத் தொடர்பான விசாரணைகளை நடத்தினர்.

விபத்தில் சிக்கிய வான் பலத்த சேதமடைந்துள்ளது.

விபத்தில் சம்பந்தப்பட்ட லொறியின் சாரதியான யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த பலிப்பையா அன்னமரியதாஸ் என்பவர் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்த விபத்துத் தொடர்பான செய்தி பரவியதை அடுத்து இறந்த மற்றும் காயமடைந்தவர்களின் விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காகப் பெரும் எண்ணிக்கையானோர் நேற்று முன்னிரவுவரை யாழ். ஆஸ்பத்திரியில் கூடிநின்றதைக் காணமுடிந்தது. (ஐ-8-ரி-180)

## பின்லாந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் என்றும் அவர் கூறினார்.

வியாழக்கிழமை, முன்னதாக விடுதலைப் புலிகளின் தூதுக்குழுவினர் பின்லாந்து நாடாளுமன்றத்தின் சர்வதேச விவகாரச் செயலாளர் பவுலா மொய்சாண்டரையும் சந்தித்துப் பேசினர். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் பற்றி இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது. (ஐ-க)


## தொழிற் பயிற்சிகள்

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலை வாய்ப்பைப் பெறக் கூடியவாறு பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

★★ RADIO, T.V., VIDEO DECK REPAIRING (காலம் 10 மாதங்கள்)

★★ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING (காலம் 07 மாதங்கள்)

★★ REFRIGERATION AND AIRCONDITIONING (காலம் 07மாதங்கள்)

★★ MOTOR CYCLE, WATER PUMP MECHANISAM (காலம் 06 மாதங்கள்)

★★ DIPLOMA IN ELECTRICAL & ELECTRONIC TECHNOLOGY (காலம் 12 மாதங்கள்)

★★ ENGLISH CLASSES FOR SCHOOL LEAVERS AND OFFICE STAFF (SPOKEN WITH BASIC GRAMMAR)

புதிய பயிற்சிகள் ஆரம்பம் :

18.10.2004 திங்கள் (கிழமை நாள்களில்)

23.10.2004 (சனி, ஞாயிறு நாள்களில்)

உத்தியோகத்தர்களுக்கான மாலைநேர வகுப்புகள் நடைபெறுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

இல.07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 -222 3335, 077 3086716 (37444) (29-16-17)

## பணியாளர்கள் தேவை

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு ஆண், பெண் உதவியாளர்கள் தேவை.

தொடர்பு: மூர்த்தி கலர்லாப், மானிப்பாய்.

T.P.: 021-222 2884

(சி-38241)

ஸ்பெயர்ட் மோட்டார் கம்பனி லிமிட் வழங்கும்

HERO HONDA

VASI SAVARI வாசி சவாரி




நீங்களும் அதிர்ஷ்டசாலிகள் ஆகலாம்

2004 செப்ரெம்பர் 20 முதல் ஒக்ரோபர் 20வரை மட்டுமே இவ்வாய்ப்பு.

★ 9 வெற்றியாளர்களும் எவ்வித செலவுகளும் இல்லாமல் இந்தியா அழைத்துச் செல்லப்படுவார்கள்.

★ புதுடெல்லியிலுள்ள ஹீரோ ஹொண்டா தொழிற்சாலையை பார்வையிடவும் வாய்ப்பு.

★ உலக ஏழு அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலுக்கும் சென்று வரலாம்.

★ 27 ஆறுதல் பரிசுகள்.

★ போட்டிக்கான கூப்பன்களை ஸ்டெபர்ட் மோட்டர் கம்பனி லிமிடட் இற்கு அனுப்ப வேண்டும்.

★ அனைவருக்கும் ஏற்ற வகையில் ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள் தற்பொழுது விசேட விலைகளில்

HERO HONDA World No. 1 Two-Wheeler Company

RG இரத்தினகோபால்ஸ் 65.63 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். T.P: 222 6185 0777-340056


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அமுதவல்லி யோகேஸ்வரன் (சாளினி)

மலேஷியாவைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமுதவல்லி யோகேஸ்வரன் அவர்கள் 12.10.2004 அன்று சுவிஸில் காலமானார்.

அன்னார் யோகேஸ்வரனின் (சுவிஸ்) அன்பு மனைவியும் நிவேதாவின் (சுவிஸ்) அன்புத் தாயாரும் அமரர் கிருஷ்ணன் - ராதா (மலேஷியா) தம்பதிகளின் பாசமிகு மகளும் அமரர் இராசரத்தினம் - பூமணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2004) சனிக்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குறுக்கு வீதி,*
*நீர்வேலி வடக்கு.*
(சி-38243)(30)

தகவல்:
திரு. க.பத்மநாதன் (மாமன்),
திருமதி இ.பூமணி (மாமி).

### சிவசம்பு சிவரத்தினம்

மட்டக்களப்பு, ஒந்தாச்சிமடத்தைப் பிறப்பிடமாகவும் நயினாதீவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சிவரத்தினம் (உரிமையாளர், நயினை அம்மன் நகைத் தொழிலகம்) அவர்கள் நேற்று (15.10.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - தாசமணியின் அன்பு மகனும் சுமதியின் அன்புக் கணவரும் திவியா, திவிசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மணி, லீலா, உதயம், வாணி (மட்டக்களப்பு) ஆகியோரின் சகோதரனும் தேவதாஸ் (தாசமணி) மணியின் மருமகனும் சேகர், காலஞ்சென்ற மதனா, சுந்தர், பாஸ்கா, வனிதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*15/13, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-38244)

தகவல்:
சுமதி (மனைவி).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.